# சிந்தனையும் பகுத்தறிவும்

## தந்தை பெரியார்



# சிந்தனையும் பகுத்தறிவும்

(மக்கள் பதிப்பு)

**தந்தை பெரியார்**

**பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு**

பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை - 600 007.

# நூல் குறிப்பு

22.06.1971ஆம் நாளில் மேட்டுப்பாளையம் பகுத்தறிவாளர் மன்றத் துவக்க விழாவில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய பேருரை


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | சிந்தனையும் பகுத்தறிவும் |
| ஆசிரியர் | : | தந்தை பெரியார் |
| பதிப்பு (மக்கள் பதிப்பு) | : | முதல் பதிப்பு : 1971<br>முப்பத்தொன்றாம் பதிப்பு : 2020 |
| நூல் அளவு | : | டெம்மி (140 mm x 220 mm) |
| அச்சு எழுத்து அளவு | : | 12 points |
| பக்கங்கள் | : | 48 |
| கட்டமைப்பு | : | சாதாரணம் |
| நன்கொடை<br>(குறைந்த அளவு) | : | ரூ.20/- |
| வெளியீடு மற்றும் உரிமை | : | **பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு**<br>சென்னை - 600 007. |
| அச்சிட்டோர் | : | ‘விடுதலை’ ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,<br>சென்னை - 600 007. |
| கிடைக்குமிடங்கள் | : | பெரியார் புத்தக நிலையம்<br>● பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை -600 007. ☎: 044-26618163<br>● பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி-620 017 ☎: 0431-2771815<br>www.dravidianbookhouse.com |

# சிந்தனையும் பகுத்தறிவும்

'பேரன்புமிக்க தாய்மார்களே! பெரியோர்களே!! இன்றைய தினம் மேட்டுப்பாளையம் மாநகரத்திற்கு வரும்படியான வாய்ப்புக் கிடைத்ததற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். பத்து ஆண்டுகளுக்கு முன்பு நான் வந்ததாகச் சொல்லுகிறார்கள். ஞாபகமிருக்கிறது; ஆனாலும், ஆண்டு ஞாபகமில்லை. இப்பொழுது வரும்படியான வாய்ப்புக் கிடைத்ததற்கு நான் மிகவும் பெருமையடைகிறேன். இங்கு பல அறிஞர்கள், பல இயக்கத் தோழர்கள் பேசினார்கள். பல அறிஞர்கள் அருமையான கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். நானும் அவர்களைப் பின்பற்றி சிலவற்றை எடுத்துச் சொல்கிறேன்.

## சிந்தியுங்கள்

நான் சொல்வதற்கு முன்பு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்வது என்னவென்றால், நான் சொல்வதை நம்பாதீர்கள்; அதன்படி நடக்க வேண்டுமென்று உடனே இறங்கிவிடாதீர்கள்; என்ன செய்ய வேண்டுமென்றால், சொல்லுவதைச் சிந்திக்க வேண்டும். சரியா, தப்பா என்று ஆராய வேண்டும். உங்களுக்கு எது சரி என்று பட்டதோ அதை ஒத்துக் கொள்ள வேண்டும்; மற்றும் எந்தக் காரியம் செய்ய வேண்டும் என்று தோன்றுகிறதோ அதைச் செய்ய வேண்டும். "நாங்கள் சொன்னோம் – நான் சொன்னேன்" என்பதற்காக ஒன்றையும், எதையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

## ஏன் சிந்திக்க வேண்டும்?

ஏன் என்பதை வலியுறுத்தி முதலில் சொல்லுகிறேன். நாங்கள் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்து மக்களையெல்லாம் பகுத்தறிவுடையவர்களாக ஆக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள். நாங்க சொல்லுவதைக் கேளுங்கள் என்றால் என்ன அர்த்தம்? நாங்கள் ஒன்றும் மூட நம்பிக்கைப் பிரச்சாரகர்கள் அல்ல; கடவுளைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ, சாஸ்திரம் சம்பிரதாயங்களைப் பற்றியோ, கடவுளுடைய பிள்ளை, அவதாரம், குமாரர், தூதர் என்று சொல்லுகிறவர்கள் சொல்லுவதைப் போல் நாங்கள் ஒன்றும் சொல்லுவது இல்லை. நாங்கள் சொல்லுகிறோம்; எங்கள் புத்திக்கு எட்டியதைச் சொல்லுகிறோம்.

எங்களைப் போலவே உங்களுக்கும் புத்தி இருக்கிறது. உங்கள் புத்திக்கு அது படுகிறதா? சரி என்று தோன்றுகிறதா? என்று சிந்தியுங்கள். இந்த உணர்ச்சி வந்து இருந்தால் மக்களுக்கு வேறு ஒன்றுமே தேவையில்லை. உணர்ந்திருப்பார்கள்.

## சொந்தப் புத்தி!

இதே மாதிரி உணர்ச்சி மக்களுக்கு ஏற்பட இடமில்லாமலும் ஏற்பட விடாமலும் நாங்கள் சொல்லுவதைக் கேளுங்கள். எனக்குக் கடவுள் சொன்னார்; “நான் கடவுளுடைய அவதாரம்; நான் கடவுளாக இருக்க வேண்டும்” என்று இப்படி எல்லாம் சொல்லி மக்களை ஏமாற்றி அவர்கள் அவரவர்களின் கருத்தைப் புகுத்தியதன் பயனால், உங்களுக்குச் சொந்தப் புத்தியைப் பயன்படுத்த வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. இன்றைக்கல்ல நேற்றைக்கல்ல; 2000, 3000 வருஷங்களாக இப்படி. மனிதன் என்பவன் அருமையான அறிவைப் படைத்தவன்; அப்படிப்பட்டவன் இன்றைக்குதான் பகுத்தறிவைப் பயன்படுத்து என்று கேட்டுக் கொள்ளவேண்டியவனாக ஆகி இருக்கிறான். பகுத்தறிவாளர் கழகம் இன்றைக்கு ஆரம்பமாகிறது. பகுத்தறிவாளர் கழகம் ஆரம்பமாகிறது என்று சொன்னால், மனிதர்களுடைய கழகம்

இன்று ஆரம்பமாகிறது என்று அர்த்தம். மனிதர்கள் என்பவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றி இன்றைக்குப் பேசப்படுகிறது.

## மனிதனும் மிருகமும்!

பகுத்தறிவு சிந்தனையே இல்லாதவர்களுக்கு மிருகம் என்றுதான் பெயர். ஏன்? அறிவிலே பகுத்தறிவு இல்லாத ஜீவன் மிருகம்; பகுத்தறிவுடையவன் மனிதன். அறிவிலே பிரிவுபட்டிருக்கிறபடி ஓரறிவு, ஈரறிவு, மூன்றறிவு, நாலறிவு, அய்ந்தறிவு, ஆறறிவு என்பது .புல்பூண்டுகளையெல்லாம் ஓரறிவு என்று சொல்லலாம். அதற்கு ஒன்றும் தெரியாது. உண்ண வேண்டியதுதான். பூச்சி புழுக்கள் அப்புறம் மூன்றறிவு என்பார்கள். குணம் கொஞ்சம் கொஞ்சம் மாறும். சிலதுக்கு நாலு அறிவு இருக்கும். சிலதுக்கு அஞ்சு அறிவு இருக்கும். ஆனால், சிந்தித்துச் செயல்படுவது என்பது 6ஆம் அறிவு. அது மனிதனுக்குத்தான் அதிசயமான காரியங்கள் செய்யக்கூடிய ஜீவன்கள் உண்டு. நம்மால் செய்ய முடியாத காரியங்கள் எல்லாம் சில ஜீவன்கள் செய்யும். ஓர் எறும்பை எடுத்துக்கொண்டால், நமக்குத் தெரியாத வாசனை அதற்குத் தெரியும்.

ஒரு குருவியை எடுத்துக் கொண்டால், நம்மால் பறக்க முடியாமல் இருக்கும்போது அது பறக்கும். ஒரு குரங்கை எடுத்துக்கொண்டால், நாம் தாவமுடியாத அளவுக்குத் தாவும். யானையை அடிக்கும் - சிங்கம். இப்படி இந்த மாதிரி மனிதனுக்கு மேற்பட்ட, மனிதனால் முடியாத சில விஷயங்கள் மற்ற அறிவுள்ளவைகளுக்கு உண்டு. சிந்தித்து, வளர்ச்சிக்கேற்ற வண்ணம் தன்னுடைய வாழ்வு நிறைவு பெறும் வண்ணம் பயன்படுத்துகிற அளவு மனிதனுக்குத்தான் உண்டு. வேறு யாருக்குமே இல்லை.

## மதியை இழந்த மனிதன்!

அப்படிப்பட்ட மனிதன் மதியை இழந்துவிட்டான். அதைப் பயன்படுத்தாமல் போய்விட்டான் பல காலங்களில். அதனால் மனிதன் வளர்ச்சியடையவில்லை. ஆனால், மனிதன் நம் நாட்டைப்

பொறுத்தவரையிலும் மான உணர்ச்சியைப் பற்றிக்கூட லட்சியம் பண்ண முடியவில்லை. சாதாரணமாக நாம் பகுத்தறிவுடையவர்கள். உலகத்தை எல்லாம்கூட தெரிந்திருக்கிறோம்; பார்க்கிறோம். செய்தி எல்லாம் வருகிறது. நாம் மாறவில்லை.

## நாம் சூத்திரர்களா?

நமக்குப் பெயர் சூத்திரன். நாம் என்றால் - சூத்திரன் என்றால் - பார்ப்பானின் வைப்பாட்டி மகன்; எப்படி என்றால், சாத்திரப்படி! யாரோ சொன்னாங்கன்னா என்றால், கடவுள் சொன்னார். இதை எல்லாம் நம்புவதன் மூலம் மானம், ஈனம் எல்லாம் இழந்துவிட்டு நம்முடைய வளர்ச்சியைப் பாழாக்கிவிட்டோம்; வயிற்றுப் பிழைப்பைத்தான் பிரமாதமாக எண்ணிவிட்டோம். அது மிருகங்களுக்குத்தான் உண்டு. நாம் அதைத்தான் பின்பற்றி வந்திருக்கிறோம். இது வரைக்கும். முன்னால் பேசிய நண்பர்கூட சொன்னார்.

## சிந்தனையும் பகுத்தறிவும்!

இந்த நாட்டில் எவனுமே பகுத்தறிவைப் பற்றி பேசவே இல்லை. இன்றைய தினம் வரைக்கும். யாராவது பேசினார்களென்றால் 3000, 2000 வருடங்களுக்கு முன்னே அதுவும் அந்தக் காலத்துப் பகுத்தறிவுதான். அதுவும் இன்றைக்கு சரியானபடி பின்பற்றுவது இல்லை. வேறு யாரும் இவைகளைப் பற்றிச் சிந்திக்கவும் இல்லை. ஏன் அப்படி ஆகிவிட்டது என்றால், அவை பகுத்தறிவுக்கு விரோதமான கொள்கைகள், செயல்கள். கடவுள்! அவர் உண்டாக்கினார்; அவர்தான் சக்தி உடையவர்; அவர் இப்படி சொன்னார்; அப்படிப் பண்ணினார்! அவருடைய மகன் இப்படிச் சொன்னார்;அவருடைய தூதன் இப்படிச் சொன்னார். அவருடைய அவதாரம் அப்படிச் சொன்னது! இந்த மாதிரி புத்திகளைக் கொண்டு வந்து மக்களுக்கிடையே புகுத்தியதால் இவனுடைய அறிவுக்கு வேலையே இல்லாமல் போய்விட்டது. அவர்களே எல்லாம் சொல்லிவிட்டார். அந்தப்படியே நடந்தால் போதும்; அதனாலே மனிதன் வளர்வதற்கு வாய்ப்பில்லை. எப்படி வாய்ப்பில்லை என்று கேட்பீர்கள். பகுத்தறிவைப் பயன்படுத்த முன்



வந்தவர்கள் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள்! மற்ற நாட்டார் இன்றைய தினம் ஆகாயத்தில் 2 லட்சத்து 30,000 மைல் தாண்டி சந்திர மண்டலம் என்ற ஓர் உலகத்திலே உலாவிவிட்டு வருகிறார்கள். மணிக்கு 5000 மைல் 6000 மைல் பறக்கிறார்கள். இதில் எதைப் பண்றான் நம்மவன்?

## ரிஷிகள், முல்லாக்கள், பாதிரிகள்

நமக்கு நண்பர்கள், கட்டுப்பட்டு நடக்கவேண்டியவர்கள், அறிவைச் சொல்பவர்கள் என்று ஆயிரக்கணக்கான தலைவர்கள், ஆயிரக்கணக்கான ரிஷிகள்; ஆயிரக்கணக்கான முல்லாக்கள்; ஆயிரக்கணக்கான பாதிரிகள்; ஆயிரக்கணக்கான பண்டார சன்னிதிகள் இருக்கிறார்கள். இவர்களைத் தவிர மதங்கள் இருந்தும் நாம் அடைந்த பயன் என்ன? ஒன்றும் முடியவில்லையே! காரணம், மனுஷன் தோன்றி எத்தனை வருஷங்கள் இருக்கும்? நம்மாலே கணக்கு எடுக்க முடியவில்லை. எவனோ ஆராய்ச்சிக்காரன் கணக்கெடுக்கிறான்; ஒருத்தன் லட்சம் வருஷங்கள் என்கிறான். ஒருத்தன் 18 லட்சம் வருஷங்கள் என்கிறான்; அதற்கு முன்னே "உலகம் என்றைக்குத் தோன்றியதோ அன்றே மனிதன் தோன்றினான்" என்கிறான்; கடவுள் உண்டாக்கினான் என்கிறான். அன்று முதல் இன்றுவரைக்கும் கண்ட பலன் என்ன? சாதாரணமாக ஒரு 100, 105 வருஷத்திலே உலகம் எவ்வளவு மாறியிருக்கிறது! நம் நாட்டிலேயே எவ்வளவு வளர்ச்சிக்கான சாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன! 100, 105 வருஷத்திலேயே இவ்வளவு வளர்ச்சியிருந்தால், மனுஷன் தோன்றிய லட்சக்கணக்கான வருஷத்திலே அல்லது 3000, 4000 வருஷத்திலே எவ்வளவு வளர்ந்திருக்க வேண்டும்? ஏன் வளரவில்லை? நம்ம நாட்டில் என்ன கடவுள் இல்லை? பல்லாயிரக்கணக்கான கடவுள்கள் இருக்கின்றன. மகான்கள் இல்லையா?

## மூடநம்பிக்கை!

ஏராளமான மகான்கள், நினைச்சவனெல்லாம் சாமியார்; நினைச்சவன் எல்லாம் மகாத்மா; நினைச்சவனெல்லாம் அந்தப் பக்தன்; இந்தப் பக்தன்.

இத்தனை பேர் இருந்தும் ஒரு சாதனைகூட நம்மால் ஏற்பட்டது என்று சொல்ல முடியவில்லையே!

## அவதாரங்களும், அதிசயங்களும்

நாம் இன்றைக்கு அனுபவிக்கின்ற அதிசயமான பொருளெல்லாம் மற்றவன் செய்து நாம் அனுபவிக்கிறோம். உங்க கடவுள் மகனும் பொறந்தான்; கடவுள் தூதன் பொறந்தான்; கடவுள் அவதாரங்கள் ஒரு வண்டி பொறந்தார்கள்; தினமும் மாட்டு ரிஷிகளென்றும், முனிவர்கள் என்றும் நினைச்சா சாபம் கொடுக்கிறவனும் நினைச்சா மலையைத் தூக்கி மலைமேல் போடறவனும், எவ்வளவு அற்புதமான மனிதர்களெல்லாம் தோன்றினார்கள்! அப்பொழுதும் ஓர் அற்புதம் கூட இன்னும் நடக்கவில்லையே!

## அறிவின் மேன்மை!

நெருப்புக் குச்சிகூட வெள்ளைக்காரன் வராதிருந்தால் நமக்கு வந்திருக்குமா? இருட்டில்தான் உட்கார்ந்திருப்போம். சிக்கிமுக்கிக் கல்லில்தானே நம்ம வாழ்வு இருக்கும். பூமியில் எருமையில் ஏறி சவாரி செய்து வந்தவனுக்கு ஆகாசக் கப்பல் வந்தாச்சு. இதெல்லாம் எப்படி வந்தது? தொழுதா வருமா? ஜபம் பண்ணினா வருமா? இல்லை, யாகம் பண்ணினா வருமா? இல்லை, கடவுளே என்று சொன்னா வருமா? ஆகவே, மனிதன் மனிதனாக இருந்து அதனாலே அடையவேண்டிய காரியங்களைச் செய்து கொள்ள முடியாமல், கடவுள், மதம், சாஸ்திரம், வேதம், தர்மம், பெரியவர்கள், மகான்கள், இந்த மாதிரியான முட்டாள்தனமான பேச்சுகளுக்கெல்லாம் நாம் காது கொடுத்து இன்றைய தினம் நாம் மிருகமாக இருக்கிறோம். எப்படீன்னு கேட்பீங்க!

## மூட நம்பிக்கையும், முட்டுக்கட்டையும்!

எனக்கு முன்னால் பேசிய தோழர்கள் எல்லாம் சொன்னார்கள் - ‘‘நமக்கு எங்கே அய்யா அறிவு இருக்கிறது?’’ எதை எடுத்தாலும் சாஸ்திரம், சம்பிரதாயம், முன்னோர்கள் சொன்னது, வேதத்தில்



சொன்னது என்று, அது எவன் சொன்னானோ என்பதைப்பற்றியெல்லாம் கவலையே இல்லை! நண்பர்கள் சொன்னார்கள், பூனை குறுக்கே போனால் உட்கார்ந்துக்குவான் - அப்புறம் போகலாமென்று! ஏன்டான்னா, சகுனம் சரியா இல்லை என்பான். காக்கா கத்துதுன்னா வெளியே போகக்கூடாதுன்னு உட்கார்ந்துக்குவான். குளிச்சிப் போட்டு வெளியே போகலாம் என்பான். முன்னெச்சரிக்கையாக ஒருத்தனையும் தொடமாட்டான். கட்டின வேட்டியோட குளிப்பான். மனுஷன்தான்; மாடல்ல இதெல்லாம் செய்கிறவன்? என்ன இருக்கிறது! மற்றும் இந்தக் கிழமையாகாது, அந்தக் கிழமைமையாகாது; இந்த நேரம் தப்பு; இது நல்ல நேரம் என்பதெல்லாம் எதுல சேர்ந்தது? அறிவைப் பற்றிப் பேசறதுக்கே ஆள் இல்லை. அறிவின் பயனை, அதன் பலனைப்பற்றி எடுத்துச் சொல்ல துணிவு எவனுக்கும் வரவில்லை. இது பெரிய காட்டுமிராண்டி நாடு. நாம் அப்படியே இருக்கிறோம். இதுதான் சொல்ல முடியும்.

## அந்நியராட்சி!

இப்பத்தான் நல்ல வாய்ப்பா நம்ம நாட்டுக்கு அந்நியன் வந்தான். சில மாறுதலைப் பண்ணினான். அவனை நம்ம மதத்துக்கு விரோதி என்று விரட்டி அடிச்சிட்டாங்க. அப்புறம் வெள்ளைக்காரன் வந்தான்; அவன் பல மாறுதல்களை உண்டு பண்ணினான். அவனையும், மதத்திலே பிரவேசித்தான், சாத்திரத்திலே பிரவேசித்தான், அதுலே அப்படி இப்படின்னு அவனை ரகளை பண்ணினாங்க; அதோட நின்னு போச்சே தவிர, அதுக்கு மேலே ஏறலே; நம்ம நாட்டில் இதுவரைக்கும் அவன் இல்லாதிருந்தால் ரொம்பப் பின்னேறி இருப்போம். அதிலே ஒன்றும் ஆட்சேபனை இல்லை. அவனாலே அமைப்பு கெட்டுப்போகுதுன்னு மக்களை ஏமாற்றிப் பிழைக்கிற அயோக்கியர்கள், அவன் இருந்தால், நாம் வாழ முடியாதென்று அவனுக்கு மோசமெல்லாம் பண்ணினாங்க. அப்புறம் எவனுமே தோணல்ல! துணிஞ்சு நாங்கதான் தோன்றினோம். துணிஞ்சு தோன்றினோம். இருக்கிற கொடுமையைப் பார்த்து அரசியலின் பெயராலே, மதத்தின் பெயராலே மக்களுக்குச் செய்யும் கொடுமையைப் பார்த்து நம்ம மக்களுக்குப் புத்தி இல்லாமல் அவர்கள் மடையர்களாக இருக்கிறதைப் பார்த்து, இதற்கு ஒரு பரிகாரம் பண்ண

வேண்டும். இந்த முயற்சியைப் பண்றவன்தான் மனுஷன். மத்த முயற்சி பண்றவனெல்லாம் வயிற்றுப் பிழைப்புக்காரன் அப்படீன்னு முடிவு பண்ணி நாங்கள்தான் ஆரம்பிச்சோம்.

## சுயமரியாதை இயக்கம்!

என்ன ஆரம்பிச்சோம்? சுயமரியாதை இயக்கம் என்றுதான் - மனுஷனுக்கு மானம் என்கிற உணர்ச்சி ஊட்ட வேண்டுமென்று! எத்தனையோ பேர் எல்லாம் எங்களோட சண்டை போட்டாங்க - சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தபோது ஒரு பெரிய மந்திரியே என்னிடம் வந்து, “என்னய்யா சுயமரியாதைன்னா நமக்கெல்லாம் மானமில்லை, மரியாதை இல்லை என்றா அர்த்தம்? இந்தப் பேரே வெட்கக்கேடா இருக்குது! எவனாவது கேட்டா கேலி செய்யமாட்டானா?” அப்படி என்று என்னை வந்து கேட்டார். அப்புறம் திருப்பிச் சொன்னேன்; “வருத்தமாக இருக்குது எங்களுக்கு, தயவு செய்து சொல்லுங்க, நீங்க யாரு? எனக்குத் தெரியணும்” “என்னத்துக்காகக் கேட்கிறீர்” என்றார். கேட்கறேன், “சமுதாயத்திலே நீங்க யாரு? எத்தனாவது? உங்க அந்தஸ்து என்ன? உங்க தொழில் என்ன?” “ரெட்டியாருன்”னாரு. “மந்திரியா இருந்தா என்ன? நீங்க யாரு? ரெட்டியாருங்கறது. சும்மா நாம் வெச்ச பேரு. நாம் ஏற்படுத்திக்கிட்ட பேரு - சும்மா கவுண்டன், செட்டியார் இந்த மாதிரியெல்லாம். பொதுவாக சாஸ்திரப்படி, சம்பிரதாயப்படி, மதப்படி, சமயத்துப்படி நீங்க யாரு? எத்தனையாவது ஜாதி?” அவர் ஒன்றும் பேச முடியவில்லை. சிரிச்சிட்டாரு. “சிரிக்காதீங்க! நீங்க எத்தனாவது ஜாதி?” 4ஆவது ஜாதிதானே? அது சாத்திரப்படி நீண்ட நாளாக இருக்குது.” நாமெல்லாம் அந்த நீண்ட நாளாக இருக்கறதைத்தான் ஒழிக்கணும்னுதான், உங்களுக்கு மானம் வரவேண்டுமென்றுதான் இதை நாங்க ஆரம்பித்தோம்.

## மேல்ஜாதியும், கீழ் ஜாதியும்!

“அப்படீன்னா உங்க ஜாதி என்ன?” “சூத்திரன்”. சூத்திரன்னா என்ன? “பார்ப்பானுக்கு வைப்பாட்டி மகன்.” எத்தனாவது ஜாதி?



4ஆவது ஜாதி உங்களுடையது! நீங்க பி.ஏ., பி.எல்., படிச்சீங்க. நீங்க மூன்று வருஷம் மந்திரியாப் பார்த்துட்டீங்க! இப்ப மறுபடியும் மந்திரியா இருக்கீங்க! நீங்க மந்திரி பதவியில் இருந்தும் இப்ப சூத்திரன் - தேவடியா மகன்! ஆனா, உங்ககிட்டே பிச்சை எடுக்கிறவன், உங்களுக்கு வேணும்னாலும் கூட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கிறவன், அவன் தன்னை மேல் ஜாதிங்கறான். நீங்களும் அவனை மேல் ஜாதின்னு ஒத்துக்கறீங்க! நீங்க அவன் காலில் விழுகறீங்க! அவன் காலைக் கழுவி தண்ணீரைக் குடிக்கிறீங்க?" என்றாரு. இதற்குப் பதில் இதைத்தான் சொன்னார். "அதனால்தான் இவ்வளவு கடுமையான முயற்சி நாம் செய்யவேண்டி இருக்கிறது. இன்று ஏற்பட்ட புண்ணா இருந்தா ஒரு கட்டுப்போட்டால் போதும். வெகு நாளா ஏற்பட்ட புண்ணு! நாத்தமும் எடுத்து புழுத்தும் போயிருக்கிறது! அந்தப் புண்ணை அறுத்துத்தானே ஆகணும். அதனால்தான் ரொம்ப நாளாச்சுங்கறதுனால இப்ப அறுக்க ஆரம்பிச்சிருக்கோம்", அப்படின்னு சொல்லி அந்த மாநாட்டை நடத்தினோம்.

## சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள்

அப்ப அதுக்கு என்ன கொள்கை? சுயமரியாதை இயக்கம் - அது என்ன? மனிதனுடைய வாழ்வு இழிவாப் போனது எந்தக் காரணத்தினால்? கடவுளால் ஏற்பட்டது. எந்தக் கடவுளால்? அந்தக் கடவுளை ஒழிக்கணும். மதத்தினால் ஏற்பட்டது; அதனால் மதத்தை ஒழி! காங்கிரசினால் ஏற்பட்டது; அதனால் காங்கிரசை ஒழி! காந்தியினாலே; காந்தியை ஒழி! பார்ப்பானாலே; பார்ப்பானை ஒழி! இந்த அய்ந்தையும் ஒழிக்கிறதுதான் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை. சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை - கடவுள், மதம், காங்கிரசு, காந்தி, பார்ப்பான் இவங்களை ஒழிக்கறது. இவங்கல்லாம் சுயமரியாதை இயக்கத்துக்குக் கேடான கொள்கைப் பிரச்சாரம் பண்ணி மக்களுக்குள்ளே புகுத்தி, மக்களுடைய ரத்தத்திலே புகுத்தி வச்சுட்டாங்க! ரத்தத்தோட கலக்கி வச்சுட்டாங்க! அதை ஒழிக்கணும்னா இந்த அய்ந்தையும் ஒழிச்சாலொழிய முடியாது. இதிலொன்றும் அரசியலைப் பத்தி பேசணும்னு அல்ல. அரசியலே இங்கே வரக்கூடாதுதான். ஆனால்,

அது இந்தக் காரியத்திற்குத் தேவைங்கறதுனாலே அதைப்பற்றி நான் எடுத்துச் சொல்கிறேன். காங்கிரசினுடைய கொள்கை - காந்தியைக் காப்பாத்தணும், மதத்தைக் காப்பாத்தணும், ஜாதியைக் காப்பாத்தணும், அந்தஸ்தைக் காப்பாத்தணும். இன்றைக்கு அதனுடைய கொள்கை அதுதான். அதுக்கு முந்தி பிடிச்சு வச்சாங்க காந்தியை! அந்த ஆளு ஒரு களிமண் மூளைக்காரன்! அவன் என்னமோ சாமி, பூதம், பக்தி, அது, இது என்று பேசினதுனாலே பிடிச்சு வச்சுட்டாங்க - அவனை மகாத்மான்‘னு! அவனும் பயித்தியக்காரனுக்கு கள் ஊத்துனாப்போல எந்நேரம் பார்த்தாலும் ‘கடவுள், கடவுள்’ என்று, “இராமன், சாஸ்திரம், வர்ணாசிரமம், இந்துமதம்” அப்படின்னு பிரச்சாரம் பண்ண ஆரம்பிச்சான். அவன் பிரச்சாரத்துக்கு நல்ல பலம் இருந்தது. பார்ப்பான்கிட்டதான் எல்லா பத்திரிகையும்! நம்மாள்கிட்டே ஒன்றும் இல்லை. அவங்க பேரைச் சொன்னாலே ஜனங்களெல்லாம் கும்பிடற அளவுக்கு பிரச்சாரமாயிருக்கு! அதனாலே அவனை ஒழிக்கணும்னு ஆரம்பிச்சோம். கடவுள், மதம் ஒழிக்கணும், வர்ணாசிரமத்தைப் பிரச்சாரம் பண்ணின காந்தியை ஒழிக்கணும். இதை எல்லாம் காப்பாத்தறதுக்காக அடிப்படைச் சட்டம் வச்சுக்கிட்டிருக்கிற ஆட்சி செய்கிற அரசாங்கத்தை ஒழிக்கணும். இதுக்கெல்லாம் கர்த்தாவாக இருக்கிற பார்ப்பானை ஒழிக்கணும், அதன்படிதான் நடந்து வருகின்றது - நாளுக்கு நாள். காரணம், அதையே எடுத்துக்காட்றேன். நான் சொல்றேன் கேளுன்னு அல்ல! அந்தப் புத்தகத்திலே இருக்கு, இந்த வேதத்திலே இருக்கு, அந்த சாஸ்திரத்திலே இருக்குன்னு அல்ல! எனக்குத் தோணுது; என் அறிவுக்குத் தோணுது. அது மாதிரி உன் அறிவுக்கு தோன்றினா ஒத்துக்க; இல்லாட்டி வேண்டாம். நான் ஒண்ணும் உங்களைக் கட்டாயப்படுத்துவதாக நினைக்கவேண்டாம்! உங்களை ஏய்க்கறதாக நினைக்கவேண்டாம்! உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்! உங்களுக்கு இவ்வளவு சக்தியுண்டு! உங்களால் இந்தக் காரியம் செய்ய முடியும்! இந்தப் பாவிக் கடவுள், மதம், சாஸ்திரங்களாலோ, மற்ற உபதேசம் செய்யறதாலோ பார்ப்பான்களினாலோ நம்ம சக்தி இந்த மாதிரி அடிமையாச்சு! இதைத்தான் சொல்றோம் - மாத்தியாகணும்



என்று! மாறாது இருக்கிற ஆளுக உலகத்திலே நாம்தான்! மற்றவன் எல்லாம் மாறிவிட்டான்; நாம்தான் இன்னும் மாறவில்லை.

## பகுத்தறிவுக் கழகம்

நம்ம நாட்டுக்கு இப்ப வேண்டியிருக்கு தீவிரமான கொள்கைகள்! பகுத்தறிவைப்பற்றிய கொள்கைகள்! அந்தக் கொள்கைகளை பிரச்சாரப் படுத்த முயற்சி பண்றோம். ஆகவேதான் பகுத்தறிவுக் கழகம் வைக்கிறோம்.இது இதுக்கு விரோதமோ, அதுக்கு விரோதமோ, அப்படியாகுமோ, இப்படியாகுமோ என்று யாராவது சொல்லக்கூடும்! எதுக்கு விரோதமாக இருந்தாலும் நியாயத்துக்கு விரோதமல்ல! நாம் பகுத்தறிவுக் கழகம் என்று ஏன் சொல்கிறோம்! உன் அறிவைக் கொண்டு சிந்தனை பண்ணிப்பாரு! அதுதான் பொருத்தம் என்று சொல்கிறோம்! மிருகத்தோடு சேர்ந்த மத்த பசங்க என்ன பண்ணுறாங்க? வர்ணாசிரம தர்ம சபைன்னு வைக்கிறாங்க! ஜாதியைக் காப்பாத்தற சபையென்றும் வைக்கிறாங்க! சனாதன தர்மசபையென்கிறான். ஜாதியைக் காப்பாத்த வேண்டும்; முன்னோர்கள் சொன்னதைக் காப்பாத்த வேணுமென்கிறான். கடவுள் கதை என்கிறானே - ராமன் இப்படிப் பண்ணினான்; கிருஷ்ணன் இப்படிப் பண்ணினான்; சுப்பன் இப்படிப் பண்ணினான் வெங்காயம் அப்படிப் பண்ணினான் என்று! இதையெல்லாம் சொல்ல அவனுக்கு உரிமை இருக்கிறது! எதைப் பார்த்துச் சொல்றேன்னா ஆதாரத்தைப் பார்த்துச் சொல்றேன். உன் புத்தி என்னடான்னா? புத்தியை உபயோகப்படுத்தக் கூடாது; மதம், கடவுள், சாஸ்திரம் முன்னோர்கள், பெரியோர்கள், மதத் தலைவர்கள் இவர்கள் சொன்ன காரியத்துக்கு புத்தியை உபயோகப்படுத்தக் கூடாது - படுத்தினா, அவர்களுக்கு விரோதம், மதத்துக்கு விரோதம், என் மனம் புண்ணாகுது என்பானுக. இவனும் இவன் மதமும்! இவன் மதத் தலைவனோ, வெங்காயமோ! மனம் புண்ணாகுமோ? நாசமாகப் போகட்டும்! என் கதி என்னாகிறது? நான் எத்தனை நாளைக்கு சூத்திரனாக இருக்கிறது? நான் எத்தனை நாளைக்கு அறிவை இழந்து, கண்டவன் சொன்னதைக் கேட்டுவிட்டு தலைவணங்கி, கும்பிட்டுக்கிட்டு இருக்கிறது? மத்தவன் ஆகாயத்தில் பறக்கிறான்; நாம் இங்கே பார்ப்பான் காலைக் கழுவி

தண்ணியைக் குடிக்கணுமா? அதனாலே உன் புண்ணில் புழுக்கட்டும்! எங்கதி எனக்கல்ல; என்னை விடவா உன் மனசு பெரிசு? என் மானத்தைவிடவா உன் மனசு பெரிசு? ஆனதனாலே நம்ம கடமையை நாம் செய்ய வேணும். ஆபத்து வரும். பயப்படாதீங்க! வந்தா என்ன? நாளைக்கு சாகிறவன் இன்றைக்கே சாகிறான். கஷ்டம் வரும். இந்த மாதிரிதான் இந்தநாட்டிலேயே மாறுதலே ஏற்படாமல் இருக்கும்படியாக செய்ததுக்குக் காரணம் எல்லாம் பலாத்காரம்; படிச்சவன் எல்லாம் அயோக்கியப் பயலாக இருந்தது; காலிப்பசங்கள் எல்லாம் சேர்ந்து மதத்தைக் காப்பாத்தணும்னு பலாத்காரம் பண்ணியதுதான் காரணம். இல்லாட்டி இதெல்லாம் மாறி இருக்குமோ? ஏதாவது ஒண்ணு சொன்னால் கிறிஸ்துவன் வந்தர்றான் சண்டைக்கு - ஏன் என் மதத்தை தாக்குறேன்னு? நாசமா போன்னு விட்டுட்டா இன்னொன்று சொன்னா முஸ்லிம் வந்துடுறான் சண்டைக்கு? ஏன் எங்க மதத்தை இந்த மாதிரி சொல்றேன்னு.

இரண்டு பேரும் தொலைஞ்சு, நாசமாகுன்னு விட்டுவிட்டு நம் மதத்தைப்பற்றிப் பேச ஆரம்பிச்சா, பார்ப்பான் மட்டும் ரகளை பண்ண மாட்டான். அவனோட வைப்பாட்டி மகன்னு நினைச்சுக்கிட்டு, சாம்பலை அடிச்சிக்கிட்டு நாமம் போட்டுக்கிட்டு “சிவசிவ ராமா ராமா” னுட்டு உளறுகிறானே. அந்தப் பயல்தான் நம்மகிட்டே சண்டைக்கு வருவான். இப்பக்கூட கேசைப் பத்தி ஒண்ணும் சொல்லலே நடப்புப்பத்தி சொல்றேன். சேலத்திலே இராமனை செருப்பாலே அடிச்சுட்டேன்னு பார்ப்பான் எவனும் பிராது போடல்ல; நம்மவன்தான் பிராது போட்டிருக்கிறான் - “அவன் இராமனை செருப்பாலே அடிச்சான்! அந்த மாதிரி பண்ணுனா என் மனசு புண்ணாகுது!” அப்படிப் போட்டு இருக்கிறான். இப்ப சம்மன் வந்திருக்கிறது. பேப்பரிலே பார்த்திருக்கலாம். பெலமா அறுத்தாத்தானே அது அறும்? அது சொத்தை வச்சிட்டுதே, புழுத்துக்கிட்டே போகுதே! அதனாலேதான் அடியில் இருந்து ஆரம்பிக்கிறான். அந்த மாதிரி சொன்னால் ஒழிய மாறாது! ஆகவேதான், இந்த இயக்கம் ஆரம்பித்ததற்குக் காரணமும், இன்னும் சில தன்மைகளும், கொள்கைகளும் இதுதான். மதத்தை

ஒத்துக்கிட்டா நான் மேல் ஜாதி, கீழ்ஜாதின்னு ஏத்துக்கத்தானே வேணும்? நான் ஓர் இந்துன்னு ஒத்துக்கிட்டேன்னா நான் சூத்திரன்னு ஒத்துக்கத்தானே வேணும்? அது மாத்திரமல்ல; மற்ற சாஸ்திர சம்பிரதாயங்களை ஒத்துக்கிட்டா, கடவுளை ஒத்துக்கிட்டா, கடவுள் சொன்னார் என்பதற்கெல்லாம் நாம் கட்டுப்பட்டுத்தானே ஆகணும்? சாஸ்திரம் என்ன சொல்கிறது என்பதற்கு நாம் கட்டுப்பட்டுத்தானே ஆகணும்? யாரடா சொன்னா, உன்னை தேவடியா மகன்னு - சூத்திரன்னு சொன்னா? கிருஷ்ணன். சொன்னான்! எங்கடா சொன்னா? கீதையிலே சொன்னான். கிருஷ்ணனையும் கீதையையும் செருப்பால் அடிக்கத் துணியாமல் போனால் நீ சூத்திரன்தானே! பயந்தீன்னா நீ சூத்திரனாக இருந்துக்கோ!

## இராமன் செய்த கொடுமை

இராமனை செருப்பால் அடித்தால் என்ன? இராமன் சூத்திரனைக் கொல்லுங்கறானே! சூத்திரனையும் கொன்னு இருக்கிறானே! யார்டா நீ, சூத்திரனா! போடு, வெட்டு துண்டு துண்டா! வெட்டினான்; துண்டாடினானே! பார்ப்பானைக் கடவுள்னு கும்பிடாமே சாமியைக் கும்பிட்ட அவனை விட்டுவிடுவதா என்று இராமன் சொல்லுகிறான். இராமன் என்ன சொல்கிறான்? ஒரு சூத்திரன் கடவுளைக் கும்பிட்டான்; பார்ப்பான் செத்துட்டான்னு கதை கட்டி, பார்ப்பான் பிணத்தை எடுத்துட்டு வந்து இராமன் வீட்டிலே போட்டான். "ஏண்டா, அவன் செத்தான்; செத்தா என்னாடா கெட்டுப்போச்சு? பார்ப்பான் சாகமாட்டானே! நேராக மோட்சத்துக்குத்தானே போக வேண்டியவன். உள் நாட்டில் அக்கிரமம் நடக்குது! என்னடா அக்கிரமம் என்னான்? தேடிப்பார்! நான் என்னடா சொல்றதுன்னான். தேடிப் போனவன் கண்டுபிடிச்சான்; ஒரு சம்பூகன் என்ற சூத்திரன் கடவுளைக் கும்பிட்டு தவம் செய்துகொண்டிருக்கிறான். "என்னடா பண்றே" என்று கேட்டான். "கடவுளைக் கும்பிட்டுட்டு இருக்கிறேன்" என்றான். "யாரடா, சூத்திரப் பயல்! சூத்திரப் பயல் பார்ப்பானைக் கும்பிடாமல் கடவுளைக் கும்பிட்டால் பார்ப்பான் சாவாது இருப்பானா?" அப்படீன்னு சொல்லி அவுனை (சம்பூகனை) துண்டு துண்டா கசாப்புக் கடைக்காரன் மாதிரி வெட்டுறான். பிறகு

பார்ப்பான் பிழைச்சுட்டான். இப்ப நாமெல்லாம் இல்லாது இருந்தா இப்ப என்ன நடக்கும்? எவன் சாமியைக் கும்பிட்டுக்கிட்டு இருக்கிறானோ அவனையெல்லாம் பார்ப்பான் வெட்டிக்கிட்டு இருப்பான். “சாத்திரம் கெட்டுப்போனது நம்பளால்” என்றுதான் சொல்லுகின்றான். சரியான மனுதர்மப்படி அரசர்கள் ஆளாததால் சட்டம் கெட்டுப்போச்சு; அதனாலே ஆட்சியை ஒழியுன்னு சொல்றான்.

## கீதோபதேசம்

இதுமாதிரி ஒவ்வொன்றையும் கிருஷ்ணன் பெயராலே சொன்னான். என்னடா கிருஷ்ணன் சொன்னான்? நான்தான் நாலுஜாதியை உண்டாக்கியிருக்கிறேன்; ஒவ்வொரு ஜாதியை இன்னின்ன இடத்தில் இருந்து பிறப்பிச்சேன். சூத்திரனைக் காலில் இருந்து பிறப்பிச்சேன். ஏன்னா, அது இழிவான இடம். அவன் நாலாவது ஜாதி; அதனால் அவன் பார்ப்பானுக்கு அடிமையாக இருந்து வேலை செய்யணும்! செய்யாட்டி என்ன? அவனுக்குத் தண்டனை நரகத்திலே போட்டு அடைச்சிடுவேன் – கிருஷ்ணன் சொன்னான். இதுதான் கீதை. இதனால் பார்ப்பான் கீதையை தலைமேல் வச்சிக்கிட்டு குதிக்கிறான். அந்தக் கிருஷ்ணனை செருப்பால் அடிக்காமல் இருந்தால் நம்ம கதி என்ன ஆகும்? அடிக்கணுங்கற பேச்சுதான் கடினமாகத் தோன்றுகிறதே தவிர, அவன் தேவடியாள் மகன்னு சொல்றது அவ்வளவு கடினமா தோன்றது இல்லையே!

## யாருக்கு மனம் புண்ணாகும்?

இப்படியாக அநேக காரியங்களில் கடவுள், மதம், சாஸ்திரம் மீறக்கூடாது; பேசக்கூடாது. பேசினால் மனம் புண்ணாகும்; பேசினால் மதத்துக்கு கேடுவரும். இந்த மாதிரி அமைப்பிலே மனுஷனைத் தலை எடுக்க விடாமல் பண்ணிட்டான். நடந்துக்கிட்டு இருக்கிறது – அறிவுள்ள மனிதனுக்கு நம்ம நாட்டிலே இருக்கிற இந்த நடப்புத்தானே! அநியாயம்! எவனாவது வெளிநாட்டுக்காரன் பார்த்தா என்ன சொல்லுவான்? நம்மாளை, “என்னடா பண்ணிக்கிட்டு இருக்கிறேன்னா, “கோயிலுக்கு போறேன்னு” சொல்லுவான். அவன், என்னடா சாமி

கும்பிடப் போறேன்னா, அவன், என்னடா சாமின்னா, ஒரு விக்ரகம் இருக்கிறது. அது என்னடான்னா கல்லு, மண். அட மடப்பசங்களா! கல்லுன்னா சாமின்னு உனக்கு எவண்டா சொன்னான் எனக் கேட்பானா இல்லையா பாரு? இந்தப்படி, இந்த ஊர்க்காரன் கேட்கமாட்டான். இங்கேயும் கேட்கமாட்டான். முஸ்லிம், அவனும் நமக்குப் பயந்துட்டு கேட்கமாட்டான். கிறித்துவனும் அப்படித்தான் சொல்லுவான். ஆனால் கல்லை சாமின்னு எந்த ஆதாரத்தைக் கொண்டு சொல்லுவான்? நம்புகிறதைத் தவிர வேறு என்ன சொல்லமுடியும்? எந்தப் பயல் மோட்சம் நரகத்தை பார்த்திட்டு வந்தவன்? கோபம்தான் வருகிறது! தவிர, உலகமே பழிக்கும்படியான நிலைமை நமக்கு வரவேண்டாமே! யார்தான் இதுக்கு பாடுபடுகிறது? எல்லாமே அவனவன் பெருமைக்குப் பாடுபட்டு பார்ப்பான் காலில் விழுந்து பெரிய பக்தன் ஆகிட்டானா, நம்ம நிலைக்கு பாடுபடறதுக்கு யார் இருக்கிறார்கள்? ஏன் இத்தனை நாளாக இந்தக் கதி ஆகணும்? அதனாலேதான் இந்த ஸ்தாபனம் பலப்படுத்தி ஆகவேணும்! இதன் மூலமாகத்தான் மனுசன், மனுசன் ஆவான். எல்லாரையும் மனிதத் தன்மை உடையவர்களாக ஆக்கணும். இந்தப் பிரச்சாரம் வலுக்கணும்! தைரியமா சொல்லணும்! கஷ்டம் வந்தாலும் அனுபவிக்கணும்! அனுபவிச்சா என்ன கெட்டுப்போச்சு? எதுக்காக? ஒவ்வொரு காலத்திலும் பலாத்காரத்தில் இறங்கித்தான் துலுக்கனும் காப்பாத்தினான் அவன் மதத்தை! கிறித்துவனும் காப்பாத்தினான் அவன் மதத்தை! இந்துக்கள் என்கிற பார்ப்பானும் காப்பாத்தினான் அவன் மதத்தை! மாறுதலா இருந்தான்; பலாத்காரத்தில் இறங்கினான் எதிரியும். நானும் அவசரம் இல்லை காலம் கொஞ்ச நல்லா இருக்குது; அறிவு தெளிவினாலே சாதிக்கலாம்னு நாம் நினைக்கிறோம்.

புத்தன் எப்படி ஒழிஞ்சான்? புத்த மதம் எப்படி ஒழிஞ்சுது? புத்த கொள்கைகள்னா வெட்டுன்னான்! கொடுமுடி சிஷ்யர்களையெல்லாம் வெட்டுன்னான். அவன் வீட்டுக்கெல்லாம் நெருப்பு வெச்சு கொளுத்துன்னான்! மடத்தையெல்லாம் சுவாதீனப்படுத்திட்டு சொல்லச்சொன்னான்! சமண மதம் எப்படி ஒழிஞ்சுது? சமணர்களையெல்லாம் கழுவேற்றினான்! 8000 பேரைக் கழுவேற்றினான்!

இன்னைக்கும் கழுவேற்றின உற்சவம் நடக்குது. இன்னைக்கும் தேவாரத்திலும், பிரபந்தத்திலும் சமணர்களை கழுவேற்றின கதை இருக்கு. சமணன் கொள்கைகளை ஆதரித்தவனை வெட்டு! அவனைக் கொல்லணும்! வெட்டணும்! அவனை சித்திரவதை பண்ணனும்! பெண்டாட்டி பிள்ளைகளைக் கற்பழிக்கணும்! அவன்களைக் கழுவேற்றணும்னு இருக்கு. இன்னிக்கும் பார்க்கிறேனே! நான் பேசறதுதான் கடுமையா பேசறேன்னு நினைப்பானே தவிர, சைவனோ, வைஷ்ணவனோ, மத்த பக்திக்காரனோ தேவாரத்தைப் படிச்சா இம் மாதிரி நூற்றுக் கணக்கான கருத்து இருக்கு! எங்குக் கண்டாலும் கொல்லு, அவன் பெண்டாட்டி பிள்ளைகளை கற்பழிக்க பெருமாளே எங்களுக்கு அருள் செய், பிரபந்தத்திலே போட்டு இருக்கிறான். எவன் ஒருத்தன் கடவுளை நம்பலையோ அவனையெல்லாம் வெட்டு! பைபிளில் சொல்லி இருக்கிறான்- அவன் கடவுள் இல்லேங்கறானா? அவன் மடையன், அவன் அயோக்கியன்! ஒவ்வொரு மதத்திலும் அப்படித்தான் அவனவனும் எழுதி இருக்கிறான். நாம் ஏன் சொல்லக்கூடாது? எவன் கடவுளைப் பரப்புகிறானோ, எவன் கடவுளைக் கும்பிடுகிறானோ அவன் மடையன்னு ஏன் சொல்லக்கூடாது? கும்பிடாதவனை மடையன்னா நாம் கும்பிடுகிறவனை மடையன்னா என்ன? நல்லாக் கவனிக்கவும். அதற்குப் பதில் நாங்கள் இதைத்தான் சொல்லுவோம். கடவுள் இல்லை, கடவுள் இல்லவே இல்லை; கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்; கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்; கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி; நம்புகிறவன் மடையன் - இவற்றால் பலன் அடைகிறவன் மகா மகா அயோக்கியன்; அப்படின்னு சொல்லுவோம். கிறிஸ்துவன் நம்மையெல்லாம் அஞ்ஞானி, புத்தியில்லாதவன், மடையன்கிறாங்க. முஸ்லிம் பேசிட்டுத்தான் இருக்கிறாங்கோ. அவங்களும் மத்தவனையெல்லாம் காட்டுமிராண்டிங்கறாங்கோ. நமக்கு மானமில்லே? இவர்களில் எவன் மறுபிறப்பு இன்னதுன்னு சொல்லுவான்?

## பிதிர் லோகம்!

எவனுடைய தாய் தகப்பன் பிதுர் லோகத்தில் இருப்பாங்கன்னு நினைக்கிறான்? பார்ப்பான் அயோக்கியப் பயல் அப்படிச் சொல்றான்;

இந்த மடையன் அரிசி, பருப்பு கொடுத்து அவன் காலில் விழுகிறான். யாருக்குடான்னா, உங்கப்பனுக்கு போய்ச் சேருதுன்னு சொல்லுவான். உங்கப்பன் எங்கேடா இருக்கிறான்? மோட்சத்திலா? - நரகத்திலா? - இல்லே, மறுபிறப்பா இங்கே வந்துட்டானா? இவைகளையெல்லாம் விட்டுவிட்டு தேவலோகத்தில் இருக்கிறானா? தெவசம் கொடுக்கின்ற எந்தப் பயலுக்காவது இது தெரியுமா? “என்னமோ கொடுக்கிறேன் - பெண்டாட்டி பிள்ளையோட இவன் காலிலே விழறேன்’’ அதனாலே இதை முட்டாள்தனம்னு சொல்லுகிறோம்!

## கடவுள் காலம்!

கடவுள் இல்லை; கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்; வணங்குகிறவன் காட்டுமிராண்டி; நம்புகிறவன் காட்டு மிராண்டி! கடவுள் இருக்கிறதுன்னு எவன் சொன்னான்? எவனோ சொன்னான்; எவன் சொன்னான்னு தெரியாது. ஆனால், பக்தனுக்கு தலைவனாக இருக்கிறானே மதத் தலைவன் அவன் ஒத்துக்குவானா?

கடவுள் தானே வந்தாருடா! அவரை ஒருத்தரும் உண்டாக்கிப் போடவில்லை. அவனும் எவனும் காட்ட இல்லைடா! அவரே வந்தாருடா. அதைத்தான் சொல்லுவான். சரி, அவனே வந்தான். நான் உண்டாக்கியவனைத்தான் முட்டாள்னு சொல்றேன். உனக்கு ஏண்டா கோபமுன்னேன். “தானாகத்தானே வந்தான். தானே உற்பத்தியானான். தானாக உற்பத்தியானது உனக்கெப்படித் தெரிஞ்சது? எனக்கேன் தெரியாமல் போச்சு? நல்லாக் கவனியுங்கள். கடவுள் இருந்தானாம், சக்தியுடையவனாம்! அவனாலேயே தெரிஞ்சுகிட்ட அதே சக்தியுள்ள கடவுள் எனக்கு ஏன் தெரியறாப்பலே பண்ணவில்லை? நான் மடையனா? அயோக்கியனா? என்னோடு சேர்ந்த இரு மகான்கள் எல்லாம் அயோக்கியர்களா? உன்னோடு சேர்ந்த மடப்பசங்கள் எல்லாம் பெரிய மகான்களா? அறிவு இருப்பதால் கேட்கிறேன். இல்லாட்டி கேட்கிறதில்லை - அறிவைப் பயன்படுத்த உரிமை இருப்பதனால்.

## கடவுளின் உற்பத்தி!

கடவுள் இருக்கிறது என்று சொன்னவன், உங்களுக்கு என்ன சொன்னான்? முதலில் கடவுளே இல்லை. இப்பதான் சமீபத்தில் 3000

வருடங்களுக்குப் பிறகுதான் ஏற்பட்டது. அதுக்குமுன்னே கடவுள் ஒன்றும் கிடையாது. கடவுள் என்கிற பேச்சே எவனுக்கும் தெரியாது. இடி இடிச்சுது. எவனோ இடின்னு ஒரு எஜமானன் இருக்கிறான்னான்! மழை பேஞ்சுது. மழை பெய்யறதுக்கின்னு ஒருத்தன் இருக்கிறான்னான். காற்று அடிச்சுது. காற்றுன்னு ஒரு எஜமான் இருக்கிறான்னான். இருட்டாச்சு இருட்டுன்னு ஒருத்தன் இருக்கிறான்னான். வெளிச்சமாச்சு, வெளிச்சத்திற்கு ஒருத்தன் இருக்கிறான்னான். நான் சொல்றதை எல்லாம் நல்லாக் கவனிச்சுக்குங்க. இவனுகள்தான் ஒவ்வொன்னுக்கு ஒருத்தன்; ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு தேவன்! அந்தத் தேவர்களுக்கு எல்லாம் தலைவன் இந்திரன். உண்டாக்குகிறதுக்கு ஒருத்தன், காப்பாத்தறதுக்கு ஒருத்தன், கொல்றதுக்கு ஒருத்தன், இருட்டுக்கு ஒருத்தன், பகலுக்கு ஒருத்தன், சாவுக்கு ஒருத்தன், மழைக்கு ஒருத்தன், காற்றுக்கு ஒருத்தன். இப்படியாக எந்தெந்தக் குணங்களைக் கண்டானோ அந்தக் காலத்திலே அதற்கு ஒரு எஜமான் நடத்தறான் - மந்திரி மாதிரி! மந்திரி சபையிலே பதினாறு பேரு இல்லையா, நமக்கு இப்போ! அதுபோல அந்தக் காலத்துலே ஒவ்வொரு வேலைக்கும் தேவன் இருந்தான்னு வேதம் சொல்லுது. கிறித்துவனுக்கு கடவுள் எல்லாம் 2000 வருஷத்தின்போதுதான்.

முஸ்லிமுக்கு கடவுள் எல்லாம் அதேபோலத்தான். ஒரு 1500 வருஷத்துக்கு முன்பு அது கொஞ்சம் மாறுதல் அடைஞ்சுது. பார்ப்பான் கடவுள் எல்லாம் 3000 வருஷத்தின் போதுதான். வேதத்திற்கு அப்புறம்தான். வேதத்தின்போது கடவுள் இல்லை. இதற்கப்புறம்தான் கடவுளை உண்டாக்கினான்.

## கடவுள் தன்மை!

அப்ப உண்டாக்கி கடவுளைச் சொன்னவன் என்ன சொன்னான்? கடவுள் இருக்கிறான்னான். எங்கடா இருக்கிறான் என்று கேட்டா, உன் கண்ணுக்குத் தெரியாதுன்னான். புரியாது எங்களுக்கு, கடவுள் இருக்கிறதுன்னா, உன் கண்ணுக்குத் தெரியாதுன்னா, எப்படி

இருப்பார்னு கேட்டா, உன் கைக்கு சிக்கமாட்டார்; உருவமே கிடையாதுன்னான். எப்படி நினைக்கிறதுன்னா, உன் மனசுக்கே எட்டமாட்டார்னான். இவனை நீங்க அறிவாளிங்கறீங்களா? இல்ல முட்டாளுங்கறீங்களா? ஒரு பண்டம் இருக்குது. அது கண்ணுக்குத் தெரியாது, கைக்குச் சிக்காது, மனசுக்கு எட்டாது! அப்புறம் எப்படிடா தெரிஞ்சுது? எப்படிடா எட்டிச்சு? அதை நம்புங்கிறான். இதைச் சொல்றவன் மடையனா? நம்புகிறவன் மடையனான்னு இப்ப நீங்க சொல்லுங்க. வேற ஆதாரத்தைச் சொல்லுங்க. வேறு விதத்தில் எப்படித் தெரியும்? அதோட விடவில்லை. அவன் தெரியுமா? அவன் சர்வசக்தி உடையவன்னான்! அவன் இல்லாம ஒரு மசிரு கூட அசையாதுன்னான்! அவனுக்கு ஒண்ணும் வேண்டியதில்லைன்னான்! அவன் ஒழுக்கமானவன்னான். அவன் ரொம்ப அருளும் அன்பானவன்னான்! கருணையானவன்னான்! எங்கேயும் இருப்பவன்னான்! இதுக்கெல்லாம் என்னடா வழியென்னா? ஆதாரம் என்ன? என்றால் நம்பு என்கிறான். எல்லா சக்தியுமுடையவனாக இருந்தால் என்ன? நம்பும்படியாகச் செய்ய என்ன அவன் சர்வசக்தி? அவனைப்பற்றி தெரிஞ்சுக்கறதுக்கு அவன் சக்தி பயன்படவில்லையே! உலகத்தில் அவன் இல்லைன்னு நினைக்கிற சனங்கள் பாதிக்கு மேலே! நாங்க மாத்திரமல்ல! உலகத்திலே கடவுள் இல்லைன்னு நினைக்கிற சனங்கள் 450 கோடியில் 200 கோடி மக்களுக்கு மேல் கடவுள் இல்லைன்னு சொல்றாங்க. ஒருத்தனையாவது கடவுள் இருக்கிறார்னு நினைக்கப் பண்ண முடியலையே!

## பரப்புகிறவன் அயோக்கியன்!

எந்தக் கடவுளையும் அவ்வளவோடு உட்டுடறாங்களா? பரப்புகிறவன் அயோக்கியன்னு சொல்லுறேன் என்றால், கடவுளை உண்டாக்கியவனோ, கடவுளுக்கு உருவமில்லை, அவருக்கு ஒன்றுமே வேண்டாம். அவர் ஒழுக்கமுடையவர், அவர் யோக்கியர் என்று சொன்னான்.

இத பரப்பற அயோக்கியன் என்ன பண்றான். கோயில் கட்டுறான்! அவனுக்கு - உருவம் இல்லாதவனுக்கு - குழவிக் கல்லாட்டம்,





பொம்மையாட்டம் உருவம் பண்ணி வைக்கிறான். எங்கிருந்தது கடவுளுக்கு உருவம்? என்ன பேசினாலும் கடவுளை மனுஷனாட்டம் நினைச்சிக்கிட்டு பேசுறானே! கடவுளுக்கு உருவம் இல்லைன்னு எல்லா மதத்தானும் சொல்லுறானுங்க, நம்மாளுக – இந்து என்கிறவன் – உருவம் உண்டுங்கறான். என்ன உருவம்? அழியாத உருவம். குறிப்பிட்ட புத்தி இருக்குதா?

ஒரு கடவுளுக்கு ஒரு தலை; இன்னொரு கடவுளுக்கு நாலு தலை, அய்ந்து தலை; இன்னொரு கடவுளுக்கு ஆறு தலை! இதோடவா விட்டான்? கடவுளுக்கு எதிரியான இராவணனுக்குக்கூட பத்து தலை என்கிறான். ஒரு தலை இருக்கிற இராமன், பத்து தலை இருக்கிற இராவணனைக் கொன்னுட்டான்னு இராமனை பெரிசு பண்ணணும்ல, அதுக்காக அந்தப் புளுகு. தலையை மாத்திரம் பெரிசு பண்ணினான். ரெண்டு கை, ஆறு கை, பத்து கையுன்னு அடுக்கிக்கிட்டே போறான். இந்த ஆபாசப் புரட்டுகளை எந்த அறிவுள்ளவன் ஒத்துக்க முடியும்? இந்தக் கட்டுக்கதைகளெல்லாம் இல்லாட்டி யாருக்கு நஷ்டம்? இந்தக் கதைகளெல்லாம் இல்லாட்டி மனிதன் வாழ முடியாதா? இதெல்லாம் மனிதன் சிந்திக்க வேண்டாமா? எவ்வளவு நாளைக்கு இந்தக் கதைகளையெல்லாம் கேட்டுக்கிட்டு சூத்திரனா இழி மகனா வாழறது? மானமுள்ளவன் சிந்திக்க வேண்டாமா? ஒழுக்கமான கடவுள் ஒண்ணுகூட இல்லையே! சிவனுக்கும் அய்ந்து தலை, பிரம்மாவுக்கும் அய்ந்து தலை. இவன் மனைவி பார்வதி சொன்னாளாம்: பிரம்மனுக்கும் அய்ந்து தலை, உனக்கும் அய்ந்து தலை. உங்க ரெண்டு பேரையும் எனக்கு அடையாளம் தெரியலையே! அவனும் நீயும் ஒரே மாதிரி இருக்கிறீங்க. அதுக்கு பயந்து சிவன் பிரம்மாவோட அய்ந்து தலையில் ஒரு தலையை கிள்ளினானாம். என்ன நியாயம்? எதுக்காக அஞ்சு தலை வேணும்? சோறு தின்ன நாலு அஞ்சு தலை எதுக்கு? நாலு பக்கம், நாலு தலை; ஆகாயம் பார்க்க ஒரு தலை. இந்தப் புத்தி எதுக்கு? இதுக்கு என்ன ஆதாரம் இருக்கு? இவனுக உண்டாக்கிட்டு கதை எழுதுகிறது தவிர, கடவுளை உண்டாக்கியவன் சொல்லலையே, ஆறு தலையுன்னு! உருவமே இல்லைன்னும் சொன்னான். அவன் கடவுளை, தத்துவம்

கடந்தவன் என்கிறான். கடவுள் என்பது உண்மைகூட இல்லையே? உண்மைக்கும் மீறினவர் என்பதுதானே!

அப்புறம் வந்த கடவுளுக்கு உருவமில்லை. அப்புறம் எப்படி கடவுளுக்கு வந்தது உருவம்? இந்தக் கோயிலில் எல்லாம் உருவம் இருக்குதே! கட்டினவன் அயோக்கியன்தானே! உருவத்தை வச்சவன் மடையன்தானே! ‘‘சர்வ சக்தியுடைய’’ கடவுளையே ஒரு மனுஷனாட்டமல்ல பண்றான்! மனுஷன் உருவம், மனுஷன் குணமெல்லாம் வைத்துத்தானே செய்றான்? கடவுளுக்கு ஒண்ணும் வேண்டாங்கறான்! அய்ந்துவேளை சோத்தைப் படைக்கிறானே? மடையன் குடுக்கிறான். அயோக்கியன் அடிச்சித் திங்கறான்! கடவுள் பெயராலே எதுக்காக கடவுளுக்கு அஞ்சு வேளை? எவன் கண்டான் கடவுள் சோறு தின்னதை? எந்தப் பய கடவுள் வாயிலே சோத்தை வெச்சு அழுத்தினான்? அது உள்ள போச்சா? அது நசுங்கிச்சா? நல்லா கவனிக்கணும். கவனிக்காததனாலே நாம் பெரிய பக்தனாயிட்டோம்! பெரிய ஆஸ்திகனாயிட்டோம் என்கிறான்!

## கடவுளுக்குக் கல்யாணம்

கடவுளுக்கு ஒண்ணுமே வேண்டாங்கிறானே - இந்த அயோக்கியப் பயல். ஏன் பெண்டாட்டி கட்றான்? ஒரு கடவுளுக்கு 2 பெண்டாட்டி; ஆயிரம் பெண்டாட்டி; 2000 பெண்டாட்டி! என்னத்துக்காக பெண்டாட்டி? ஏதாவது தெரியுதா அவனுக்கு? பெண்டாட்டியோட மாத்திரம் இல்லையே, கல்யாணம் வேறு பண்றானே மடையன்! ஒரு தடவை பண்ணினா பரவாயில்லை. வருஷா வருஷம்லே பண்றான்! கல்யாணத்திற்குப் போற முட்டாளுங்க, போன வருஷம் பண்ணின கல்யாணம் என்னாச்சு? யாரு அடிச்சிக்கிட்டு போனா அவளை? என்ன நோவு வந்து செத்தா? இல்லே அந்தக் கல்யாணத்துக்கு ஒரு வருஷம்தான் உரிமையான சட்டமா? எவன் கேட்கிறான்? ஒரே கல்யாணத்திற்கு வருஷா வருஷம் போறானய்யா மடையன்! என்னான்னா, சாமிக்கு கல்யாணம். இந்த மாதிரி அறிவுள்ள மனிதனைக் கொண்டாந்து மடையனாக்கறான் - சாமியின் பேராலே! ஒழுக்கமே உருவான கடவுள்னா அவனுக்கு வைப்பாட்டி எதுக்கய்யா?

சுப்ரமணியனுக்கு வைப்பாட்டி, கிருஷ்ணனுக்கு லட்சக்கணக்கான வைப்பாட்டிங்க! என்னதுக்கு இதெல்லாம்? மிருகத்திலே சேர்ந்ததா? வைப்பாட்டி மாத்திரம் இல்லேய்யா! இந்தக் கடவுள் பசங்க கண்டவன் பெண்டாட்டிகிட்டே போயி சீமாத்து அடி வாங்கிட்டு வந்திருக்கானுங்களே. இதெல்லாம் கடவுள்னு நடக்குதே! நான் சொல்றது மாத்திரமில்லே; கோயில்லே உற்சவம் நடக்குதய்யா! சீரங்கத்திலே, இருக்கிற சாமி உறையூருக்கு வர்ரான் - 'தேவடியா வீட்டுக்கு. இந்த இந்தத் தடிப் பாப்பாரப் பசங்க தூக்கிட்டு வந்து இறக்கிவிட்டு விடிய விடிய காத்திருந்து, வைப்பாட்டி வீட்டிலிருந்து திரும்பக் கல்லுக் குழவியைத் தூக்கிட்டு வர்ரான். வருஷா வருஷம் ஒரு பண்டிகை. ஒவ்வொரு ஊரிலேயும் உற்சவம் நடக்கும் போதெல்லாம் விஷ்ணு தேவடியா வீட்டுக்குப் போறான். சிவன் தேவடியா வீட்டுக்குப் போறான். என்ன நியாயம்? கடவுளாலே மனுஷனுக்கு அறிவு வருதா? இல்லே ஒழுக்கம் வருதா?

## கடவுளின் கருணை

அன்பான கடவுளுங்கறானே, எந்தக் கடவுள் கருணையானவன்? போய்ப் பாரேன் கடவுளை எல்லாம்! எந்தக் கடவுளைப் பார்த்தாலும் கையிலே கொடுவாளு, அரிவாளு, ஈட்டி, வேலாயுதம், சூலாயுதம், மழு, கொட்டாபுளி, வில்லு, கத்தி, சுத்தி, கொலைகாரப் பசங்களுக்கு என்ன வேணுமோ அதெல்லாம் கடவுள் கையிலே கொடுத்திருக்கானுங்க! அது எப்படி கடவுள் ஆகும்? "அன்பே உருவான கடவுள், அன்பே சிவன், சிவனே அன்பு என்று'' இருக்கும் போது சிவனுக்கெதுக்கய்யா வேலாயுதம் சூலாயுதம்! எதுக்குச் சொல்றேன்? சிரிக்கிறதுக்காகச் சொல்லலே! நம்மை எவ்வளவு முட்டாளாக்குறான்! அதை வெச்சுக்கிட்டுதானே நாமெல்லாம் இப்ப மனிதனாயிருக்கிறோம்? அன்பே வடிவான கடவுளுக்கு என்ன வேலை? அவதாரமா வந்த கடவுளு, சிவனுக்குப் பிள்ளையா பொறந்த பசங்க, சிவனோட மகன், விஷ்ணு, இந்தப் பசங்களுக்கெல்லாம் என்ன வேலை? அவனைக் கொன்னான், இவனைக் கொன்னான்? அசுரனைக் கொன்னான், ராட்சதனைக் கொன்னான், எத்தனை பேரைக் கொன்றான், மூணுகோடிப்

பேரைக் கொன்றான். அஞ்சு கோடிப் பேரைக் கொன்னான். கசாப்புக் கடைக்காரப் பசங்களா? இல்லே கொலைகாரப் பசங்களா - கடவுள் பேரை வைச்சுக்கிட்டு இருக்கிற பசங்க! ராமாயணம் என்னடான்னா, ராமன் மூணுகோடிப் பேரைக் கொன்றான். பூமி பாரத்தையே கொறச்சான்! கொலை வேலைகளைத்தானே கடவுளுக்கே ஒப்படைச்சான்! சிந்திச்சா இதெல்லாம் வெளியே வருமே! முட்டாள்தானே! நமக்கென்னத்துக்கு அப்படீன்னு நம்பிக்கிட்டுப் போவான்! குறை சொல்லறதுன்னா, என்ன அர்த்தம்? எத்தனை பேரை ஏமாத்திப் போட்டான்! எத்தனை பேரு மடையன்களாக இருக்கான்! இந்தக் கதைகளினாலே, இந்தக் கோயில்களாலே, இந்தச் சாமிகளாலே என்ன பயன்?

## கடவுள்களின் ஒழுக்கம்!

நினைச்சா ராமாயணம்ங்கறான், நினைச்சா கந்த புராணங்கறான், நினைச்சா பகவான் என்கிறான், வெங்காயம் என்கறான், விநாயகர் புராணங்கறான். எதை எடுத்துப் பார்த்தாலும் அசிங்கம், ஆபாசம். அதுதானே எல்லாத்திலேயும் மேல நிக்குது! எந்தக் கடவுளை யோக்கியமான கடவுளுன்னு சொல்றீங்க நீங்க? எவன் அயோக்கியத்தனம் பண்ணாத கடவுள்? கடவுள்னு சொன்னா ஒழுக்கத்தையாவது உண்டாக்க வேண்டாமா? பண்ணற அயோக்கியத்தனங்களை எல்லாம் பண்ணி மக்களை நம்பச் செய்து ஒரு கடவுள் ஒழுக்கமா இருக்கறார்னு சொல்றதுக்கு இல்லையே? ஒரு மனுஷன் நம்பறதுக்கு கடவுள் லாயக்கா இருக்கார்னு சொல்றது இல்லையே? எத்தனை கோர்ட்டு! எத்தனை போலீசு! எத்தனை ஜெயிலு! இதான் நம்ப கடவுளோட பெருமையா? ஆகவே, மனிதன் மடையன் ஆனதற்கும், தப்பான காரியங்கள் செய்யறதற்கும் அடிப்படையான காரணமே, கடவுளும் கடவுளின் கதைகளும்தான்!

இதை மாத்தினா மனுஷன் யோக்கியனாயிடுவான்! நாமெல்லாம் பகுத்தறிவாளனாக மாறினா, ஒரு மனுசனுக்கும் இம்சை கொடுக்கமாட்டோமே! நம்மளாட்டம்தானே இருக்கும் அவனுக்கும் என்றல்லவா தோணும்! இப்ப ஏய்ச்ச வரைக்கும்லே அடிக்கச் சொல்லுது!

வளர்ச்சிக்கே இடம் கொடுக்கலேயே! ஆகவே, மனிதனுடைய வாழ்க்கையை நாசமாக்கி, மிருகப் பிராயமாக்கி, வளர்ச்சி இல்லாமல் செய்தது இந்தக் கடவுள், மதம், சாத்திரம், சம்பிரதாயம், வேதம், முன்னோர்கள் இவங்கதான். இவங்களை குத்தம் சொல்றேன்னுட்டு நீங்க தப்பா நினைக்கப்படாது! நியாயப்படி கொஞ்சம் புத்தியை சிலவு பண்ணினாலும் நான் சொல்றது எல்லாம் நியாயம்தான்னு ஒத்துக்குவீங்க.

என்ன அப்படி? இவங்களெல்லாம் என்னைக்கு உண்டானவங்க? என்னைக்கு உற்பத்தி பண்ணினாங்க? சொல்லுங்க! கடவுள் என்கிறதை உற்பத்தி பண்ணி ரெண்டு மூவாயிரம் வருஷங்கள் இருக்கும். அதுக்கப்புறம் கடவுள் கதை, ராமாயணம் இதெல்லாம் எழுதி ஒன்று, இரண்டு ஆயிரம் அல்லது இரண்டாயிரத்து அய்நூறு வருஷங்கள் இருக்கும். இராமாயணமெல்லாம் 2200 அல்லது 2300 வருஷம், இவ்வளவுதான். மதக்காரனெல்லாம் என்ன? கிறித்து மதக்காரன் 2000 வருடமாவது, இஸ்லாம் மதக்காரனுக்கு 1500 வருடமாவது. உங்க அறிவைக் கொண்டே சிந்தியுங்கள்.

## மனிதனின் பண்டைய நிலை

இந்த 2000 வருஷத்துக்கு முன்னே மனிதனுடைய யோக்கியதை எப்படி - 1500 வருஷத்திற்கு முன்னே மனுஷனுடைய அறிவு, யோக்கியதை எப்படி இருந்தது? அப்புறம் 3000 வருஷத்துக்கு முன்னே அறிவு, யோக்கியதை எப்படி இருக்கும்? உங்களுக்குத்தான் தெரியுமே! 150 வருஷத்துக்கு முன்னே ஒரு நெருப்புக் குச்சியே இல்லையே. 3000 வருஷத்துக்கு முன்னே கதையைக் கேட்டா, மனுஷன் வேட்டி கட்டலே, மனுஷன் காட்டிலே திரிஞ்சான், அப்படியே இலையை வைச்சு மறைச்சிக்கிட்டான். காட்டிலே திரிஞ்சப்போ பச்சை மானைத் தின்னான், பச்சை மீனைத் தின்னான், பச்சைக் காய்கறிகளைத் தின்னான். அம்மா, அக்கான்னு அப்ப பேதமே கிடையாது. மிருகங்களைத் தின்னான். 3000 வருஷங்களுக்கு முன்னே அப்படி இருந்தவன். இதெல்லாம் எப்படிச் சொல்வான்? அன்னைக்கு அவன் புத்திக்கு என்ன தோணிச்சோ அதைத்தான் உண்டாக்குவான்.



அதைத்தானே பேசுவான் அவன். இன்றைக்குத் தோன்றி இருக்கிற அறிவு, சங்கதி அன்னிக்கு எப்படி தோன்றியிருக்கும்? எவந்தான் ஆகட்டும் அறிவாளி இல்லைன்னா புளுகுகிறான்! எல்லப் பயலும் நம்பறான்! புளுகில்லாத மனிதத் தன்மைக்கு மீறின வீரத்தன்மைங்கற சங்கதியில்லாம எந்த மதம் இருக்குது? எந்தக் கடவுள் இருக்குது? எந்த மதம் எடுத்தாலும் அதிலே புளுகினாத்தான் மதமாகும். பாரதமோ, ராமாயணமோ, இந்து மதமோ, சைவ மதமோ, விஷ்ணு மதமோ, கிறித்துவ மதமோ, இஸ்லாமிய மதமோ எதை எடுத்தாலும் கொஞ்சம் பொய்யைச் சேர்த்துத்தான் ஆகணும். காலம் பிந்தினதாலே கொஞ்சம் அறிவுக்குப் பொருத்தமா சொல்ல முடிந்தது. இப்ப ஒருத்தன் மதம் ஏற்படுத்தினான்னா அறிவுக்குப் பொருத்தமாத்தான் ஏற்படுத்துவான். அந்தப் பழைய முட்டாளுங்க இல்லாமே, இன்றைய முறையிலே ஒருத்தன் அறிவைப் பயன்படுத்தினான்னா அறிவைத்தான் ஆதாரமா வைத்து மதத்தை ஏற்படுத்துவான். அன்னிக்கு ஏற்படுத்தினவன் மூட நம்பிக்கையை ஆதாரமாக வைத்து ஏற்படுத்தினான். மதம்னா ஒரு கடவுள் இருந்தாகணும், அதுக்கு மனுசத் தன்மைக்கு மீறினவன் ஒருத்தன் இருந்தாகணும். இரண்டும் இடமில்லாமல் எந்த மதமும் கிடையாது. ஏன், இந்துமதம் எதுலே ஆரம்பிச்சான்? அவனைப் பார்த்து இவன் காப்பியடிச்சான்; அவ்வளவுதான். நாளைக்கு பார்ப்பான் அந்த அறிவுக்கு மேற்பட்ட சங்கதி நம்பிக்கைக்கு இல்லாதபடி, சிந்திக்க வகையில்லாதபடி, அதைத்தானே அவன் கடவுளுங்கறான்; அதைத்தானே அவன் அற்புதங்கறான், அங்கு ஒரு சாமி இருக்கிறார்; அவன் சாணி எடுத்தா சந்தனமாயிருக்குங்கறான். அதைச் சொன்னாத்தான் அவன் சாமியார் ஆவான்; இல்லாட்டா வெறும் சாமி ராமசாமிதான் அவன். அவர் இருக்காரு; அவர் செத்துப் போனவனுக்கு உயிர் கொடுத்தாரு; நோவு தீர்ந்து போச்சு, அப்பதான் அவன் சாமியார் ஆவான்; இல்லாட்டி டாக்டர் ஆவான். இந்த மாதிரி புளுகினால்தான், அதிசயம், அற்புதம், பெரியவர்கள், தெய்விக சக்தி பொருந்தியவர்கள், தலைவர்கள், மகான்கள் எல்லாப் பசங்களும் அந்தப் புளுகினாலே வந்தவங்க.

## இதிகாச புராணங்கள்!

நீங்க ராமாயணத்தையோ, பாரதத்தையோ, ராமனையோ, கிருஷ்ணனையோ எடுத்துக்குங்க. வேணும்னா புளுகு இல்லாம அதுகள் நடக்குமா? ராமன் எப்படி வந்தான்? அவங்கப்பனாலே வந்தவன். அவன் அப்பன் யார்டா? அவன், 60000 பெண்டாட்டி கட்டினான். 60,000 வருடம் இருந்தான். அவன் இப்ப எங்க ஓடிப்போய்விட்டான்? எவனாலே இருக்க முடியும் 60,000 வருடம்! எல்லாம் ஆதாரத்தோடு வந்திருக்கிறேன். 60,000 வருடம் இருக்க ஒரு மனுஷனுக்கு அவசியம் என்ன? 60,000 பெண்டாட்டி என்னத்துக்குக் கட்டினான்? அய்யா சொன்னாரு! 60,000 பொண்டாட்டின்னா 300 வருடமாகும் - ஒரு பெண்டாட்டியை இன்னிக்குப் பார்த்துட்டு இரண்டாம் தரம் பார்க்கணும்னா! அதுவரைக்கும் அவ என்ன பண்ணுவா, இந்த (60,000) அறுபதாயிரத்தை எப்படி சமாளிப்பான்? மிஷினா வைச்சுட்டுப் போவான். என்ன கதை! எதுலே சேர்ந்தது? எப்படி நம்ப முடியும்? 60,000 வருடம் இவன் இருந்தான். 60,000 வருடம் இவன் பெண்டாட்டி எப்படி இருப்பா? எங்கே போய் வரம் வாங்கினா? எங்கே போய் தவம் பண்ணினா? இப்படியா, புளுகறதுக்குக் கதை ஆரம்பிக்கணும்! கடவுளாச்சே அதை ஒழுங்காகவாவது வைக்க வேண்டாமா? கடவுள், ராமன் அவதாரம் அப்படின்னு சொன்னா, அந்தக் கடவுள்னு சொல்றபோது கொஞ்சம் மரியாதை கொடுக்க வேணாமா? என்ன பண்ணுறான்! அசுவமேத யாகம் பண்ணிப் பொறந்தான்னான். யாகம் பண்ணியதாவது மனுஷத் தன்மையோடு பண்ணினானா? போட்டிருக்கிறதே! யாகம் பண்ணனும்னா, பெண்டாட்டியைக் கண்டவனுக்கு விட்டு, புள்ளே பெக்கறதுதான் யாகம்! பெண்டாட்டியை பாப்பானுக்குக் கூட்டிக் கொடுத்து, அவனுங்க செனை பண்ணிக்கொடுத்து, காசு வாங்கிக்கிட்டுப் போனாங்கன்னு எழுதியிருக்குது! வார்த்தைதான் நான் பச்சையா சொல்றேனே தவிர, தந்திரமா அதுலே எழுதியிருக்குது. பிராமணனுக்குத் தட்சணையாகக் கொடுத்து, அவங்க திருப்தியடைஞ்சு இவங்கிட்டே ஒப்படைச்சு பணம் வாங்கிட்டுப் போனாங்க. அப்படித்தான் செனை ஆக்கியிருக்கானுக

அவங்க! இவன் (தசரதன்) படுத்துக்கிட்டதாக எழுதலே! என்னத்துக்காக அப்படி? அதோடு மட்டுமல்ல; ராமனோட அம்மா, யாகம் பண்ணி, அப்புறம் அவங்களைப் படுக்க வைச்சு, அந்தக் குதிரையோட ஆண் குறியை எடுத்து அதைப் பெண் குறிக்குள் சொருகி அப்புறம்தான் யாகம் நடந்திருக்குது! ராமாயணத்திலேயே இருக்குது! நானே சொல்றேன்னு நினைக்காதீங்க! எதுக்கு இதெல்லாம் சொல்றேன்னா, அவ்வளவு முட்டாளுங்களாக இருந்தபோது செஞ்ச காரியம் அதெல்லாம்! உண்டாக்கின ஒரு கற்பனைக் கதை?

ராமர் கதைன்னா சரி, பொறவியிலேயே இவ்வளவு அசிங்கமா! கடைசியிலே அவனுக்காவது ஒழுக்கத்தைக் கற்பிச்சானா? அவனைக் கொன்னான், இவனைக் கொன்னான்! ராட்சதனைக் கொன்னான்! வாலியைக் கொன்னான்! இப்படிக் கண்டவனையெல்லாம் கொன்னான்! என்டான்னா அவர்கள் எல்லாம் பார்ப்பானுக்கு விரோதிகள். பச்சையா சொல்றான், நான் யார் தெரியுமா? பிராமணனோட விரோதிகளைக் கொல்ல வந்தவன்.இந்த வார்த்தை கதைதானே!அதோடவாவது உட்டுட்டு மரியாதையா போயிடலாமே! ஏதோ நம்மை இழிவுபடுத்தறதுக்கு எழுதினான்னா, தன்னையே இழிவுபடுத்திக்கிட்டானே மடையன்! ராமன் மாத்திரம் கடவுள் இல்லே! அவன் பெண்டாட்டி கதை என்ன? அவளை இன்னொருத்தன் அடிச்சிட்டுப் போயி அவளை செனை பண்ணி அனுப்பிச்சிட்டான்னு எழுதறான்! ஒரு புத்தகத்திலே அவன் வந்து அடிச்சிட்டுப் போனான்னு எழுதறது. ராமன் கடவுளாம்! இவனுக்குத் தெரியாதா? – அவன் வருவான் அடிச்சிட்டுப் போவான்னு? உட்டுட்டுப் போயிட்டானே காட்டிலே ஒண்டியா! அவன் சொல்லி வைச்சாப்லே வந்தான்; கூப்பிட்டான்; கூடவே போயிட்டா! அவ போயிட்டு சும்மா வரலியே! வீட்டுக்கு வரப்போ 4 மாச செனையோட வந்திருக்கா! இந்த மாதிரியே கடவுள் கதை எழுதறே? அதை ஒத்துக்கறதில்லே நாமோ, நடந்ததுன்னு ஒத்துக்கறதில்லையே! அறிவுக்காக எழுதினான்னு வைச்சுக்கோ, சுகத்துக்காக எழுதினான்னு வைச்சுக்கோ, அந்தக் கடவுள் அவுசாரியாச்சே! அதை இவன் கூப்பிட்டு வந்தான்னு ஏன் எழுதறே? நீயும் நானும் பொறுத்துக்கறோம்!





இன்னொருத்தன் என்ன சொல்லுவான்? நம்ம ஆம்பளை சாமியே அயோக்கியசாமி, பொம்பளைச்சாமி விபசாரி சாமிம்பான்! நமக்கு மானம் இருந்தா இதையெல்லாம் ஏற்றுக்கொள்ளுவோமா? இன்னும் இந்தக் கதையெல்லாம் வாழ இடம் கொடுப்போமா? அது மாத்திரமல்லவே! கிருஷ்ணன் பெரிய கடவுள், ராமன், கிருஷ்ணன், கந்தன், முருகன், புள்ளையாரு, சிவன், விஷ்ணு இவனெல்லாம் எப்படிப் பிறந்தான்?

## கிருஷ்ணன் பிறப்பு!

கிருஷ்ணன் எப்படிப் பிறந்தான்னா, விஷ்ணு ரெண்டு மசிரைப் பிடுங்கிவிட்டான். ஒரு மசிரு கிருஷ்ணனாச்சு, இன்னொரு மசிரு அவன் அண்ணனாச்சு! ஒரு மசிரு கறுப்பு, இன்னொரு மசிரு வெள்ளை. மசிரிலிருந்தா பொறக்கிறது கடவுள்? நீங்க படிக்கணும் யாராவது எப்படியிருந்து பொறந்தான். எப்படியாச்சுன்னு? இது மாதிரியான கடவுளை உண்டாக்கிறது? மசிரிலிருந்து பொறந்தான்னு!

## கணபதி பிறப்பு!

அதோட உட்டியா? கணபதியை எப்படி உண்டாக்கினே நீ? கணபதியை எப்படி உண்டாக்கினான்? சிவனும் அவன் பெண்டாட்டியும் காட்டிற்குப் போனாங்களாம். காட்டில் பொம்பளை யானையும் ஆம்பிளை யானையும் கலவி பண்ணிக்கிட்டிருந்ததாம். உடனே இவளுக்கு உணர்ச்சி வந்துவிட்டதாம்! அப்புறம், அவளும் யானையாட்டம் ஆனாள். அவனும் ஆனான். ரெண்டு யானையும் சேர்ந்தது, ஒரு குட்டி விழுந்தது. அது யானையாட்டம் போச்சு. அதுதான் புள்ளையார். இது புள்ளையாரு புராணம் - விநாயக புராணம். என்ன நியாயம்? இப்படியா ஒரு கடவுளை உண்டாக்கறது? இந்தப் பாழாப்போன கடவுள், தமிழ்நாடு பூராவும் இந்தக் கடவுள் மத்த நாட்டைவிட இங்கே அதிகம். இந்தக் கடவுள்கூட பழைய கடவுள் இல்லை. இப்ப மத்தியிலே வந்த கடவுள். வட நாட்டிலேயிருந்து எவனோ கொண்டுவந்தான். வாதாபின்னு எவனோ அரசாண்டான். அவன் கொண்டுக்கிட்டு வந்தானாம் இதை! பெரிய புலவர் எழுதியிருக்கிறார். (Vice-Chanceller) துணை வேந்தராக இருந்த மீனாட்சி சுந்தரம் எழுதியிருக்கார். விநாயகன் வடநாட்டுலேயிருந்து

கொண்டு வரப்பட்டதுன்னு! அதுவும் 1200, 1300 வருடமாகுது. அது உலகத்துப் பூராவுமே கடவுளாயிருக்குது. மற்ற சுப்பிரமணியன் எப்படி பொறந்தான். கடவுள்னு சொன்னா அந்த அயோக்கியப் பசங்களுக்கு 2000 வருஷத்துக்கு முன்னே அறிவில்லேங்கறது மாத்திரமில்லே, மானமும் இல்லே - அந்த முட்டாப்பசங்களுக்கு. சுப்பிரமணியன் என்று கடவுளை எப்படி உண்டாக்கினான் கந்தனை! அவன் எப்படி பண்ணினான்? தேவர்களெல்லாம் போய் எங்களுக்கு ஒரு சேனாதிபதியைக் கொடு என்று கேட்டார்களாம், சிவனை. சிவன் ஆகட்டும் என்று சொல்லிவிட்டு பொண்டாட்டியைக் கூப்பிட்டு ஒரு சேனாதிபதியைக் கொடுக்கலாம் என்று சொன்னான். இரண்டு பேரும் கலந்தார்கள். இதெல்லாம், ராமாயணத்திலேயே இருக்குது. இந்தத் தலைப்பை மாத்திரம் படியுங்கள் தயவு செய்து (வால்மீகி ராமாயணத்தின் மொழி பெயர்ப்பைக் காட்டி, கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய கிருஷ்ணசாமியைத் தந்தையவர் படிக்கச் சொல்கிறார். அவர் தலைப்பைப் படிக்கிறார்) பார்வதியும் சிவனும் புணர்ந்தது. ராமாயணம் இது. இதுல எழுதுறான், “பார்வதியும் சிவனும் புணர்ந்தது.” இதுதான் தலைப்பு. ஏண்டா புணர்ந்தது? எதுக்காக புணர்ந்தது? எழுதறான் பின்னாலே, இதை எவனாவது மறுக்க முடியுமா - நான் சொல்றதை? ராமாயணத்தையில்ல. நான் கையிலே வைச்சுக்கிட்டுச் சொல்றேன்! 1000 வருஷம் கலவி செய்தார்கள். கர்ப்பம் ஆகலை.

தேவ வருஷம் 100ங்கறான். ஒரு தேவ வருஷத்துக்கு மனித வருஷம் ஆயிரம். 1000 வருஷம் கலவி பண்ணினான். புள்ளையாகலே! உடனே தேவர்கள் எல்லாம் வந்துட்டானுக. இனிமேல் புள்ளை பொறந்தா எங்களையெல்லாம் ஒழிச்சிக் கட்டிடும். அப்படின்னு சொன்னாங்க. அவன் நிறுத்தினானாம். நிறுத்தின உடனே வெள்ளமாய் போச்சாம் இந்திரியம்; அது போய் ஒரு சமுத்திரத்திலே விழுந்ததாம் - கடலுலே ஆத்துலே. அது ஆறாய்ப் போச்சாம்! ஆறுதலையாய் போச்சாம். அது என்ன கணக்கோ? ஆறுன்னா என்ன கணக்கு? அது கங்கையிலே விழுந்து அதை ஒரு பொம்பளை எடுத்தாளாம். ஆறைப் பிடிச்சிக்கட்டி அணைச்சாளாம், ஒன்னாச்சாம்; தலை ஆறாச்சாம்! பால்

கொடுத்தாளாம். ஆறுமுகம் ஆனான். அது வைணவக் கதை, இது இராமாயணத்திலே!

## சுப்பிரமணியன் பிறப்பு (சைவக் கதை)

சைவக் கதை இன்னொரு கதை. தேவனுங்க போய் கேட்டானுங்க. சிவன் கலவி செய்ய ஆரம்பிச்சான். 1000 வருஷமா ஒன்னும் இல்லை. தேவர் எல்லாம் குறுக்கப் படுத்துக்கொண்டு நிறுத்துன்னான்! நிறுத்தமாட்டேன்னான்! ஏண்டான்னான்? நிறுத்தினா வெள்ளமாப் போகுமே, அதை எவண்டா தாங்கறதுன்னான். நீங்க சொல்றாப்லே நடக்கிறேன்னான்! சரி பிடிங்கடா கையிலேன்னா; தேவர்கள் கையிலே புடிச்சாங்க; அவன் விட்டான்.

அத்தனை தேவர்களும் புடிச்சான்க. என்னா பண்றதுன்னான்க. குடிங்கடான்னான். குடிச்சானுக. அத்தனை தேவன்களும் சினையாயிட்டானுங்க. அப்புறம் என்ன பண்றதுன்னான். செனையானதும் அழுதானுங்க. இன்னமே ரகளை பண்ணாதீங்க; அப்படீன்னு சொல்லிட்டு அந்தக் குளத்திலே போய் குளிங்கடா, சினை கரைஞ்சு போகும்னான். குளத்திலே குளிச்சாங்க சினை கரைஞ்சது; இது புராணம். சொல்றானே சிவன், "தனித்த முத்த உருக்கியன்ன வெண்புனல் பருகுங்கள்" என்னுடைய இந்திரியம் முத்தை உருக்கினாப்போல் தெளிவாக இருக்கும். குடிங்கடா என்கின்றான். தேவர்கள் வாங்கிக் குடிச்சானுங்க! அப்புறம் ஒழுகினது ரெண்டொரு பொட்டு. அது சுப்பிரமணியன் ஆயிட்டான்! அதுதான் கந்தன்னாலே அந்த வார்த்தைக்கு விந்துன்னு அர்த்தம் - சமஸ்கிருத முறைப்படி - ஸ்கந்தன்னு பேரு. தமிழிலே சொல்றபோது கந்தன்; வடமொழியிலே சொல்றபோது ஸ்கந்தன் என்று பெயர். ஸ்கந்தம்னா ஸ்கலிதம்; ஸ்கலிதம்னா, விந்து. மனிதனுடைய விந்துதான் அந்தக் கடவுள். இது மாதிரிதான் கடவுளுக்கு மரியாதை கொடுக்கிறான். இது மாதிரிதான் கடவுளையெல்லாம் உண்டாக்கியிருக்கிறான். மரியாதை என்ன?

## பிரம்மன் கதை!

பிரம்மன் யார்ரான்னா, அவன் மகளைக் கட்டிக்கிட்டானு முடிக்கிறான். அவள் சரஸ்வதிங்கறான். அதுக்கு புராணம் இருக்குது.

அவதாரமா ஒரு பிள்ளையை உண்டாக்கினான். அவ அழகாக இருந்தா. அவன் போய் எட்டிப் புடிச்சான். அவ எட்டிக் குதிச்சு ஓடினாள். அவள் மானானாள். சிவன்கிட்டே போய் அவ அழுதா. என்ன? - என் அப்பன் என்னைக் கட்டிப்பிடிக்கிறானேன்னு! சிவன் பிரம்மாவைக் கூப்பிட்டு "ஏண்டா மடையா! உன் மகளைப் போய் கட்டித் தழுவுறே?ன்னு" கேட்டான். ஆசை வந்துட்டா அம்மா என்ன? மக என்ன? என்றான். "சரி" சிவன் அதையே சொன்னான் - அவகிட்டே. அவ புரிஞ்சுகிட்டா. மகதான் பெண்டாட்டி அவனுக்கு, அவன்தான் இவளுக்குப் புருஷன்! எதுக்காக இந்த மாதிரி கதை எழுதணும்? என்ன லாபம்? இது எழுதி ஆகிறது என்ன? ஏன் எழுதினான்? முட்டாளா இருந்தப்போ எழுதினான். இன்னிக்கும் அதே கதையைப் பயன்படுத்தச் சொல்றான். எப்படியோ தோழர்களே! எல்லாம் ஆபாசம், அசிங்கம்.

## தற்கால நிலை!

ஜனங்களை வேறே பக்கம் திருப்பறதுக்கு இல்ல இந்தப் பிரச்சாரம். அதுக்காக சங்கராச்சாரி இருக்கான்; மத்துவாச்சாரி இருக்கான்; மடாதிபதி, அவன் இவன்களெல்லாம் இதையே பிரச்சாரம் பண்ணினா நம்பாதவர் யார் இருப்பா?

இந்த விளக்கத்தைச் சொன்னா அறிவு வரும்; அவனுங்களெல்லாம் மதிக்கத்தக்கவனுங்க; அவனுங்க அந்தப் பிரச்சாரம் பண்றானுங்க. இந்த முட்டாளுகளுக்கு எப்படி அறிவு வரும்?

## நானும் குன்றக்குடி அடிகளாரும்!

ஒரு கூட்டத்தில் குன்றக்குடி அடிகளாரை வச்சுகிட்டு இந்தக் கதையைச் சொன்னேன் நான். கடவுளாவது வெங்காயமாவது மடப் பசங்களுக்குத்தான் கடவுள்னேன் நான். அவர் உடனே "எனக்கு கடவுள் நம்பிக்கை உண்டு. இப்படிச் சொல்றதுனாலேதான் கடவுள் நம்பிக்கை உலகத்திலே செத்துப்போச்சு; இவர் மேலே தப்பில்லை; உண்டாக்கின மடையனுக இந்த மாதிரி பண்ணிட்டானுங்க - கடவுள் நம்பிக்கை ஒழியறாப்போல - அப்படின்னு அவர் சொல்லிட்டு

தப்பிச்சுட்டுப் போயிட்டாரு. மறுக்க முடியாது கதைங்களை; நான் சொல்ற கதைகளே கற்பனைகளில் எழுதியிருக்கிறதே! எவனாலேயும் மறுக்க முடியாது. என்னத்துக்காக இந்த மாதிரி எழுதினானுங்க என்பதுதான் இப்ப கேள்வி. எப்ப எழுதினான்னா, எழுதின காலம் 2000 வருஷம். அன்னிக்கு மனுஷனுக்கு முட்டாள் அறிவுதான் இருந்தது: இப்ப கோயில் கட்டற மடையன் சாமிக்குப் பெண்டாட்டி வைப்பாட்டி, தலை, கால், ஆயுதம், சோறு, சாறு வைச்சு இன்னிக்கு கடவுளை உண்டாக்குகிறானே! 1971லே கடவுளை உண்டாக்குற மடையன், கடவுளைக் கற்பிக்கற மடையன், பரப்புற மடையன், இதையெல்லாம் பண்றான். அப்புறம் 1990 வருஷத்துக்கு முன்னே எப்படி உண்டாக்கியிருப்பான் கடவுளை? யோசிக்கணும் நீங்க. அப்பப் பரப்பிட்டான். இப்ப கஷ்டமாயிருக்குது. சொன்னா எங்க பேரிலே வெறுப்பாயிருக்குமே தவிர, இப்படி உண்மையான சங்கதியெல்லாம் சொல்றனேன்னு எங்களை மதிக்கிறவன் யார் இருக்கிறான்? பரப்பிகிட்டே வர்றோம் கொஞ்சம் கொஞ்சமா. 40 வருடத்து வேலை?

## பண்டைய அரசர்கள்!

இதுவரைக்கும் நம்மகிட்டே அரசாங்கம் இல்லே; பழைய காலம் தொட்டு வந்த அரசன் எல்லாம் பார்ப்பானுக்கு அடிமை; சேர, சோழ, பாண்டியன் எல்லாம் என்ன? பாப்பான் போனா புண்ணியம்னு நினைக்கிறவன்தானே?

## மாறுதல்!

இப்பதானே இந்த 100 வருஷத்திலே எல்லாம் மாறுது. நான் பொறந்த காலத்தில் கூட, நான் சின்னப் பையனா இருக்கறப்போ பொம்பளைங்கள் நிறையபேர், பார்ப்பானுக பார்வைபட்டா புண்ணியம்னு நினைச்சிகிட்டு இருந்தாங்க.

உங்களுக்கு இப்ப தெரியாது! அந்தக் காலத்தைச் சொல்றேன் நான். சாணியை புடிச்சா புண்ணியம்னு இருக்கறபோது ஒரு மனுஷன் பார்வை பட்டா புண்ணியம்னு நினைக்க மாட்டானா?

## 125 கோடி நாத்திகர்கள்!

உலகத்திலே எவ்வளவு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது தெரியுமா? 400 அல்லது 450 கோடி மக்கள் இருக்கிறாங்கன்னா அதுலே 125 கோடி கடவுள் இல்லேங்கறவங்க. மேலும் 100 கோடி பகுத்தறிவாளர்கள். உலகத்திலே எப்படி 125 கோடி மக்கள் கடவுள் இல்லேங்கறாங்கன்னா, 35 கோடி மக்கள் ரஷ்யாவிலே கடவுள் இல்லே. கோயிலை இடிச்சான், குளத்தை இடிச்சான், சர்ச்சை இடிச்சான். பைபிளை நெருப்பிலே போட்டுக் கொளுத்தினான். பாதிரிகளையெல்லாம் வெட்டினான். இப்ப அவங்க ஏழை இல்ல. பணக்காரன் இல்லை. அதை விட்டுட்டு சைனாவுக்கு வந்தா 85 கோடி மக்களில் 75 கோடி மக்களுக்குக் கடவுள் இல்லை. எல்லாம் புத்த கொள்கை. அதிலே ஒரு 75 கோடி, இதிலே ஒரு 35 கோடி, ஜப்பானிலே 10 கோடியிலே 8 கோடி பேருக்குக் கடவுள் இல்லை; கடவுளே இல்லை என்கிற கொள்கை. சந்தேகம் இல்லை. பர்மாவிலே 3 கோடியில் 2 கோடிப் பேருக்குக் கடவுள் இல்லை. அவர்கள் எல்லாம் பவுத்தர்கள். இலங்கையிலே 3லே 2 பங்கு பேருக்குக் கடவுள் இல்லை. சயாமில் முக்கால் வாசிப்பேருக்குக் கடவுள் இல்லை. இவங்களெல்லாம் கடவுள் இல்லைன்னு முடிவு பண்ணினவர்கள்; கடவுளே இல்லாதவர்கள்.

## உலகெங்கிலும் பகுத்தறிவாளர் கழகங்கள்!

இது தவிர அய்ரோப்பாவிலே பகுத்தறிவாளர் கழகம்னு எவ்வளவு இருக்குதுன்னு தெரியுமா? ஜெர்மனியிலே, ஸ்பெயினிலே, லண்டனிலே, கிரீஸ்லே ஒவ்வொரு ஊர்லேயும் இது ஒரு நாகரிகம் 50, 60 வருஷமா பகுத்தறிவாளர் கழகம், ஆராய்ச்சியாளர் கழகம், உண்மை நாடுவோர் கழகம், சிந்தனையாளர் கழகம், பச்சையாகவே நாத்திகர் சங்கம், தாராள மனப்பான்மை சங்கம் இதெல்லாம் இங்கிலீசுலே பேர் உண்டு. ஒவ்வொரு ஊர்லேயும் ஒவ்வொரு கழகம் இருக்கு. ஒவ்வொரு ஊர்லேயும் லட்சம் பேர், 2 லட்சம் பேர், 5 லட்சம் பேர், 20 லட்சம் பேர் ஊர் ஊராகப் பரவுது. அங்கே எல்லாம் நான் போய்விட்டு வந்தவன். பாரீஸ்லே போய் நான் நாத்திகன் சங்கத்தில் இறங்கினேன். அவங்க

ஒரு பேப்பர் போட்டிருக்காங்க. அந்த பேப்பர்லே மத்தியிலே ஒரு சிலுவை ஒண்ணு இருக்குது.

அதை ஒருத்தன் வெட்டறான். ஒரு காலே புடிச்சிகிட்டு வெட்டறான். அது ஒரு பொம்மை. உலகம் முழுச்சுகிச்சு, கடவுள் எங்கேயும் செத்துப்போச்சு. ரொம்பப் புளுகாமல் இருப்பது - மதத்துக்கு பிரயோசனப்படறது முஸ்லிம்தான். முஸ்லிம்கள்தான், அவுங்க கடவுளைவிட, சமுதாய ஒற்றுமை, சமுதாய லட்சியத்திலே ஒற்றுமையா இருப்பதனாலே அதுக்காகக் கொஞ்சம் அந்த வேகத்திலே இருக்காங்க, மற்ற நாட்டிலே அது தேவையில்லை.

## உற்சவமும் உல்லாசமும்!

நம் நாட்டிலே நிறைய கோவிலுங்க, நிறைய ஆதரவு. மைலுக்கு 5 கோவில். எந்தக் கிராமம் எடுத்தாலும் கோவில், அதுல எல்லாம் 30 சாமி, 100 சாமி, 3 வேளை 5 வேளை பூசை. வருடத்துக்கு 3 தடவை 4 தடவை பண்டிகை. பண்டிகைன்னா சும்மாவா! பசங்கள் எல்லாம், அந்தக் குமரிப் பொம்பளைங்க எல்லாம் வருவாங்களேன்னு இவன் போறான், வாலிபப்பசங்க வாராங்களேன்னு அவளுக வராங்க. இவங்க ரெண்டுபேரும் முட்டிக்கிறது பெரிய கல்யாணப் பண்டிகை சாமிக்கு. இதுக்கு முன்னே இன்னும் கொஞ்சம் பெருமையாயிருந்தது. உற்சவத்திலே 100 தேவடியாள் வருவாள்; ஒவ்வொரு ஊரிலே இருக்கும் தேவடியாளும் ஒவ்வொரு கோவில் உற்சவத்திற்குப் போவா. இப்ப அது போயிட்டது. இப்ப நம்ம பொம்பளையை வெளியே உடறதில்லே. கோவில்னா உட்டுடறோம் தாராளமா. அவங்க என்ன பண்ணுவாங்க பாவம்! மக்களைக் காணவேணும்னா தெருவிலே நடக்கணும்னா கோவிலுக்கு போனாதான் சும்மா இருக்கிறான். இது ரெண்டு பேருக்கும் ஆட்டமாப் போச்சு. கூட்டம் அதிகம் வருது. என்னென்ன பண்ணினா கூட்டம் அதிகமா வருவாங்களோ அதைச் செய்கிறான். இவ்வளவு ஆடம்பரம் என்ன சாமிக்கு! இவ்வளவு வேடிக்கை, இவ்வளவு உற்சவம் என்ன? இதையெல்லாம் மாத்த வேண்டியவங்களாக இருக்கிறோம். எப்படி மாத்தறது? அறிவு வந்தாத்தானே துணிஞ்சு மாத்த முடியும்?

அறிவு இல்லையின்னா எப்படி மாத்த முடியும்? அடடே, சாமியை ஏண்டா சொல்றதும்பான்! தோழர்களே, மனித சமுதாயம் மாறியாகணும்! ஒருத்தனையும் கேட்காம உலகம் மாறிக்கிட்டுப் போகுது! எங்க போகுதுன்னு சொல்ல முடியாது.

## கல்வி நிலை

இருக்கிறதிலே மட்டம் நம்பதான், நம்ப ஆயுசுலே 200 வருடத்திற்கு முன்னே 5 பேர்தான், நம்ப படிப்பு. 2000 வருஷத்துக்கு முன்னே, 100லே ஒருத்தன்கூடப் படிக்கவில்லை. பாப்பான்தான் இருந்திருப்பான். அவனும் படிக்கல்லே. பாடம் கேட்டவன், பாடம் ஒப்பிக்கிறவன்; எழுதவும் தெரியாது, படிக்கவும் தெரியாது. அதற்கு உதாரணம் இன்னிக்குச் சொல்றேன்.

## சமஸ்கிருத மொழியின் நிலை!

இவ்வளவு சொல்றாங்களே, சமஸ்கிருதத்தைப்பற்றி இன்னைக்கும் எழுத்தறிவிலே எல்லாம் பாடம்தானே. இவ்வளவு பெருமையாய் பேசறாங்களே. வேதம் எழுத்தில்லையே? காத்தாதானே இருந்தது! சப்தமாகத்தானே இருந்தது! நாளுக்கு நாள் மாத்திக்கிட்டே வந்தாங்க.

## மக்கள் தொகை வளர்ச்சி!

5 வருஷம்தான் ஆயுசு - முன்னே. சொல்றேன்னா கிறித்து பிறந்த வருஷத்திலே உலக ஜனத்தொகை 20 கோடி; கி.பி. 1ஆம் வருஷம் உலக ஜனத்தொகை 20 கோடி; கி.பி. 1460இல் 47 கோடி. ஏறக்குறைய 1500 வருடமாச்சு 1க்கு இரண்டாக. அப்படி இருந்தவன் 1800இல் 340 வருடத்தில் 74 கோடியாச்சு, கொஞ்சம் முன்னேறியிருக்காங்க ஜனங்க, ஏதோ வைத்தியம் கியித்தியம் பார்த்து சவுகரியம் பண்ணியிருப்பாங்க, அல்லது கொஞ்சம் சுகாதாரம் வந்திருக்கும். அப்புறம் 1914இல் அந்த 74 கோடி 165 கோடியாச்சு. இரட்டிப்புக்கு மேல் ஆச்சு. அப்புறம் அய்யா, 20 வருடத்திற்கு ஒருக்கா, 15 வருடத்திற்கு ஒருக்கா இரட்டிப்பாவுது. 1914இல் 165 கோடி, 1955இல் 320 கோடி ரெட்டிப்பாச்சு. 40 வருஷத்தில் ரெட்டிப்பாச்சு. 1964இல் 360 கோடி,

1970இல் 400 கோடி. இந்த நூறு வருஷத்துலே மளமளன்னு மாறிகிட்டு வந்திருக்கு. இப்பகூட 1961இல் நம்ப நாட்டிலே இந்த ஜனங்களே 25% அதிகம் ஆயிருக்காங்க. 4 கோடியிலிருந்து தமிழ்நாட்டிலே 5 கோடியாயிட்டாங்க. கணக்கென்னான்னா, 100க்கு 25% 10 வருஷத்திலே 25 பேர். ஆனா 40 வருஷத்திலே ரெட்டிப்பாகணுமே. இன்னிக்கு ஆகிற மாதிரி ஆயிருந்தா இரண்டாயிரம் கோடி ஜனங்க இல்லே இருப்பாங்க. இப்பத்தானே வளர்கிறோம். சாகிறதில்லே.

## மருத்துவ வளர்ச்சியும், மக்கள் வளர்ச்சியும்!

அன்னிக்கு 5 வயசுலே செத்தோம். இன்னிக்கு சராசரி வயது 45 அல்லது 48. நம்ம நாட்டிலே 48. வெள்ளைக்காரன் நாட்டிலே 65, 70. பொம்பளைங்களெல்லாம் 65 வருஷம் இருப்பாங்க - வெள்ளைக்காரன் நாட்டிலே. இன்னிக்கு இன்னும் 30 வருஷம் போயிட்டா நம்பளே 75 வருஷம் இருப்போம்.

வெள்ளைக்காரன் 100 வருஷம் இருப்பான் சராசரி. 150 வருஷம் இருந்தாதான் 100 வருஷம் இருப்பான் சராசரி. 150 வருஷம் இருந்தாதான் 100 வருஷம் ஆகும். ஏன்னா 50 வருஷத்திலே சாகிறவங்க நிறையப்பேர் இருப்பார்கள். இன்னும் 100 வருஷம் போனா 200, 300 வருஷம் சாகமாட்டாங்க. காரணம் என்ன? பரிகாரம் அவ்வளவு தெரியுது இன்னிக்கு. முன்பெல்லாம் காலரா வந்தா ஒரு கிராமமே பாப்பராயிடும். இன்னிக்கு பட்டணத்திலே காலரா. என்னடான்னா இந்த வாரம் 8 பேர் செத்தாங்கன்னா, ஏண்டா செத்தாங்கன்னு கேக்றான். 25 லட்சம் பேர் இருக்கிற ஊர்லே 50 வருஷத்துக்கு முன்னே அப்படி இல்லையே. எனக்குத் தெரிய 75 வருடம் இருக்கலாம். எங்க ஊர் தாதம்பட்டி, நண்பர் குப்புசாமி இருக்கிறார். அதுதான் எங்க அம்மா ஊர். அந்த ஊர்லே ஒரு வருடம் அடித்த காலராவுலே 50 வீடு காலியாச்சு. ஒரு ஆள்கூட இல்லை. அன்னிக்கு ஒழிஞ்ச ஊர் இன்னைக்கும் ஊராகலை. 2, 3 வீடுதான் இருக்கு.

சேலத்திலே காலரா வந்தா 2000 பேர் சாவாங்க - ஒரு வருஷத்திலே. ஈரோட்டில் நான் சேர்மனா இருந்தபோது 400 பேர் செத்தாங்க. இன்னிக்கு



8 பேர்கூட சாகறதில்லே. எதனாலே சாகலைன்னா, அதுக்கெல்லாம் பரிகாரம் பண்ணினான். வாய்க்காலை வெட்டி மாத்தினான். வடிகட்டிக் கொடுக்கச் சொன்னான். புதுசா மருந்து கண்டுபிடிச்சான். ஊசி போடறான், இப்ப காலரா வந்தா ஒருத்தனும் சாகறதில்லே. டாக்டர் இல்லாம போனா என்ன இரண்டு தடவை வந்து ஒரு ஊசி போட்டா நின்னு போயிடுது – ஆஸ்பத்திரி கொண்டு வந்தால். க்ஷயரோகம் வந்தா செத்தே ஆகணும் முன்னே. இப்ப தப்பிச்சிக்கிறோம். வயிற்றுப் போக்கு வந்தா செத்தாகணும் அப்போது! இது எல்லாம் உளமாந்தைன்னு பேரு அப்போ. வந்தா செத்தாகணும்! புத்து வியாதிக்குத்தான் மருந்து கிடைக்கலே. மற்றதெல்லாம் சவுகரியம் பண்ணிடுறான். போனவாரம் நீங்க பார்த்திருக்கலாம். கிட்னி கெட்டுப் போச்சு, கிட்னின்னா சிறுநீரகம் என்று சொல்வாங்க. அது வந்தா சாகவேண்டியதுதான். போன வருடம் ஒரு பையன் ஆஸ்திரேலியாவிற்குப் போய் 800 ரூபாய் செலவு செய்து சவுகரியமாய் வந்தான். இந்த வருடத்திலே இந்த மாதம் முதல்லே 2 கிட்டினியும் கெட்டுப்போச்சு. ஆபரேஷன் பண்ணினான். நல்லா இருக்கிற பசங்க ரெண்டு பேரைக் கூப்பிட்டு ஆளுக்கு ஒன்னைக் கொடுங்கடான்னான். அறுத்தறுத்து எடுத்துக்கிட்டான். பணம் கொடுத்தான். இரண்டையும் அந்தப் பையனுக்கு வச்சுத் தச்சான். இப்ப அவன் நடக்கிறான். இன்னும் இதயத்தை வைக்கிறான். பிளாஸ்டிக் இதயத்தை வைச்சான்னு சொல்றாங்க.

என்னாலே நம்ப முடியலே. ஆனா மேல் நாட்டிலே இருந்து செய்தி வருது. எதுக்குச் சொல்றேன்? இப்படி அதிசயங்கள், அற்புதங்கள் கண்டுபிடித்த வண்ணம் இருக்குது! இன்னும் சொல்றேன்? 2030இல் கண்டிப்பா நீங்கள் 100 வருடம் இருப்பீங்க. 150 வருடம் இருக்க முடியும். நாளுக்குநாள் அறிவைக் கொண்டு, பகுத்தறிவைக் கொண்டு சிந்திச்ச வண்ணமா இருக்கிறாங்க! மனிதன் நடக்க வேண்டியது மாறிக்கிட்டே வருது.

## கடவுளை செருப்பால் அடிச்சவனுக்கு வயது 92!

எப்படி நான் 92 வயதுவரை இருக்கிறேன்; உடம்பைக் காப்பாத்துறேன்; யாரோ ஒருத்தர் சொன்னாங்க ஓய்வு எடுத்துக்கோங்கன்னு. நான்

கோவிச்சுக்கிட்டேன். ஒய்வு திமிர் பிடிச்ச பசங்களுக்கெல்லாம் வேணும். பணக்காரப் பசங்களுக்கு! தன்னை பெரியவன்னு காண்பிச் சுக்கிறவனுக்கல்ல. ஓய்வு வேணும்! எனக்கு எதுக்கு ஓய்வு வேணும்? சும்மா இருக்கிறதுதான் நோவாயிருக்குது, விளையாட்டா சொன்னேன், நான் சவுக்கியமா இருக்கிறவனுமல்ல, போன பக்கம் எந்தப் பண்டம் கொடுத்தாலும் திங்கிறவன்தான். ராத்திரியெல்லாம் ரயிலிலேதான் பிரயாணம், எதைக் கொண்டு நான் 92 வயது இருக்கிறேன். நாளைக்கு 93 பொறக்கப்போகுது. மூடநம்பிக்கை கொண்டு பார்த்திருந்தா இந்நேரம் நான் செத்து எத்தனெ நாளாயிருக்கணும்? கடவுளைச் செருப்பாலே அடிச்சவன் எவனாவது பொழைப்பானா? கண்ணு போயிருக்காதா? நோவு வராதா? குட்ட நோவு வராதா? ஒரு கேடும் வரலையே எனக்கு? காரணம், பரிகாரம் அவ்வளவு இருக்கு.

## நானும் டாக்டரும்!

நான் போய் அறுத்து சரி பண்ணிகிட்டு வந்துட்டேன். இப்ப ஒண்ணுக்குப் போய்கிட்டே இருக்குது. எனக்கு ஆபரேஷன் பண்ணினாங்க. எனக்கு தெரியவே தெரியாது. டாக்டர் சொன்னார் நீ ஆபரேஷன் பண்ணிக்கிறியான்னார். உங்களுக்குத் தைரியமா இருந்தா பண்ணுன்னேன். எனக்கு தைரியமா இருக்குன்னார், சரி பண்ணுங்கன்னேன், ஏம்பாட்டிலே நான் படுத்திருந்தேன்; எனக்குத் தெரியாது தூக்கத்திலே!

என்னைக் கொண்டுபோய் ஆபரேஷன் பண்ணி இரண்டரை மணி, இரண்டே முக்கால் மணி நேரம் ஆனப்புறம் படுக்கையிலே போட்டாங்க. அங்கு ஒரு ஒண்ணரை மணி நேரம் பொறுத்துத்தான் எனக்கு நினைப்பு வந்தது. இந்தச் சங்கதி எனக்கு ஒண்ணும் தெரியாது, நினைப்பு வந்த உடனே இந்நேரம்வரை தூங்கினேனாக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அப்புறம் கேட்டேன். ஆபரேஷன் சொன்னாரே, என்ன ஆச்சுன்னு? ஆயிப்போச்சுன்னாங்க;நான் சட்டுன்னு இங்கேதான் படுத்திருந்த இடத்திலே பண்ணினாங்கன்னு



நினைச்சுட்டு இருந்தேன். 2ஆவது நாள்தான் தெரியும் என்னைத் தியேட்டருக்கு எடுத்துக்கிட்டுப் போய் ஆபரேஷன் பண்ணிக் கொண்டுவந்து போட்டாங்கன்னு. காரணம், என்னவோ ஒரு மருந்து. இப்படின்னா போதும் சும்மா எறும்பு கடிச்ச மாதிரிதான் இருக்கும். குத்தினது தெரியாது. அப்படித் தந்திரம் வெச்சிருக்காங்க. கொண்டு போயிருக்காங்க, கொண்டாந்திருக்காங்க. எனக்கு ஒண்ணும் தெரியலே. இந்த மாதிரி புதுசு புதுசா மருந்து அறிவினாலே வந்துகிட்டே இருக்கு. நாம் இன்னும் குளவிக்கல்லு சாமி, அதுக்குக் கல்யாணம், கருமாதி, வைப்பாட்டி வீட்டுக்குப் போவுது, அதைத் தேரிழுக்கணும். இந்த மாதிரி முட்டாள்தனத்திலேயே இருந்தோமானா எதைக் கொண்டு வளருவோம்?

## திருவாரூர் தேர்!

இந்தா பாருங்கோ! இரண்டு மூன்று மாசத்துக்கு முன்னாலே அக்ரமம்! திருவாரூரிலே ஒரு தேர் இழுத்திருக்காங்க. அது 150 டன் எடை, ஆறு லட்ச ரூபாய் செலவு. அதை இழுக்க 5,000 பேர்! ஆளுக்கு 2 ரூபாய் கொடுத்திருக்காங்க! 1971இல் நம்ம அரசாங்கமும் ஆதரவு கொடுத்திருக்காங்க! நாம் எவ்வளவு முட்டாளாக இருக்கிறோம்? எங்கு நமக்கு விமோசனம்?

## மனிதன் ஒழிக்க வேண்டியவை

ஆகவே, அருமைத் தோழர்களே! நாமும் மனிதர்களாகணும்; அதற்குக் கடவுள் ஒழியணும், மதம் ஒழியணும், சாத்திரம், சம்பிரதாயம் எல்லாம் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போடணும். மனிதனுக்குமேல் எவனும் இல்லைன்னு நினைக்கணும். மனித சக்திக்கு மிஞ்சின சக்தி கிடையாது உலகத்திலே என்கிற எண்ணம் வரணும்.

இதெல்லாம் ஆனாதான் நாம் பக்குவமுடையவர்களாவோம். அதற்காகத்தான் நாம் செய்யவேணுங்கிறது. சும்மான்னு இல்லை, மத்தபடி மதமோ, சம்பிரதாயமோ, கடவுளோ, கடவுளைப்பற்றிய

சங்கதிகளோ மத்தவைகளோ ஒன்றும் உண்மை கிடையாது. அதை நினைச்சுகிங்க மனசிலே தெரியுமா!

## புள்ளையார் சுழியும், புளுகும்

ஒண்ணுகூட உண்மையில்லை எதெடுத்தாலும் புள்ளையார் சுழி போடறதுன்னு சொல்வாங்க; ஆரம்பத்திலே பொய்யிலே ஆரம்பிச்சாத்தான் இதெல்லாம் நிலைக்கும். ராமாயணத்தை நம்பணும்னா அறிவோட நம்பனீங்கன்னா அதுலே ஒரு வரிகூட உண்மை கிடையாது. ஆரம்பத்திலிருந்து புளுகுதான் வரும்! ராமாயணம், பாரதம், கந்தபுராணம் இதெல்லாம் இருக்குதல்ல நல்லா கவனியுங்க! ராமாயணத்திலே வந்தவன் ராட்சதன்! கந்த புராணத்திலே வந்தவன் அசுரன். எல்லாம் ஒரே ஜாதி. பேருதான் மாற்றம். பாரதத்திலே வர்ரவனுங்களும் அசுரனுங்க!

## இராமாயண காலம்!

ராமாயணத்தை நீங்களும் படிக்கறதாயிருந்தா யுகம் ஏறக்குறைய 20 லட்சம் வருஷத்திற்கு முன்னாலேங்கறோம். ராமாயணத்திலே என்னடா எழுதியிருக்கிறோம்னா ஆயிரம் வருடம் முன்னாலே, நடத்தை எல்லாம் போட்டிருக்கிறான். ராமாயணம் நடந்து 15 லட்சம் வருடத்திற்கு முன்னாலே யுகம்னு. அதிலே எழுதியிருக்கிற கதை என்னான்னா பவுத்தத்தைப் பற்றி எழுதியிருக்கான். 'பவுத்தனை உன் நாட்டில் வைக்காதே அவன் நாத்திகன்; அவனை ஒழி, அவனை நாட்டைவிட்டு வெளியாக்கு' அப்படின்னு எழுதுறான். நம்பணும் அப்பதான். ராமாயணம் 1500 வருடத்தை நம்புவதா! இல்லை, அந்த 15 லட்சம் வருடத்தை நம்பறதா? அதுலே வர்ர ஆளையெல்லாம் நம்பணும், வசிஷ்டன் வர்றான், நாரதன் விசுவாமித்திரன் வர்றான், இந்தப் பசங்களெல்லாம் எங்கிருந்தவர்கள்? பூலோகத்தில் இருந்தவர்களா? அவனுங்க வயசு என்னடான்னா? ஒவ்வொருத்தனுக்கும் 10 லட்சம், சதுர்யுகம் - 5 சதுர்யுகம் என்கிறான். இதெல்லாம் நம்புனாதானே இராமாயணம்.

## இராவணன் யார்?

ராவணன் யார்ரான்னா ராட்சதன்கிறோம். அசுரன்கிறோம், ஆதாரம் எடுத்து யார்ரான்னு பார்த்தா பிரம்மாவுடைய பேரன், பிரம்மா பார்ப்பான்? அப்படியிருக்க அவன் எப்படி ராட்சதன் ஆனான்? ராமாயணம் நடந்தது கீழே பூமியிலா அல்லது மேலேயா? நாரதர், விசுவாமித்திரர், வசிஷ்டன் எல்லாம் பூலோகத்திலா, மேலோகத்திலா? கதை, புளுகை எல்லாம் நம்புனாதானே ஒத்துக்க முடியும்? அவன் ராட்சதனா இருந்தா, சூத்திரனா இருந்தா தபசு பண்ணுவானா? சம்புகன் தபசு பண்ணியதற்கே கொன்றிருக்கானே? சூத்திரன் பண்ணுவானா? ராவணன் வேத விற்பன்னன், அதுலே கெட்டிக்காரன், இதுலே கெட்டிக்காரன்னு சொன்னா? பாப்பாந்தானே வேதத்தை உச்சரிக்கலாம்? சூத்திரன் உச்சரிச்சா நாக்கை வெட்டணும். சூத்திரன் காதிலே கேட்டா ஈயத்தைக் காச்சி ஊத்தணும், நெஞ்சிலெ பூந்தா பொளக்கணும், ராவணன் ராட்சதனா இருந்தா எப்படி வேதம் படிப்பான்? இவ்வளவு பொய்க்கும் துணிஞ்சி நாம்ம நம்பினா அது ராமாயணம்.

## பாரதம்!

அதே மாதிரி பாரதம், இங்கே நடந்ததா? அங்கே நடந்ததா? மேல் லோகத்திலியா! அஸ்தினாபுரத்தில் நடந்ததாகச் சொல்கிறான். அதுலே வியாசன் என்று ஒருத்தன், அவனுக்கு மகன் பராசரன்னு ஒருத்தன், அவன் மேல் லோகத்திலே இருக்கிறவன். அவன் இங்கே வந்து, பஞ்சபாண்டவர் அம்மாவிடம் போனான் என்கிறான்.

## குந்தி பெற்ற பிள்ளைகள்!

குந்தி எப்படி பிள்ளை பெற்றாள் என்றால், அவளுக்குப் புருஷனிடம் படுக்கக்கூடாது என்று சபதம், பின்னே எப்படியடா பிள்ளைஆச்சு என்றால், சூரியனுக்கு ஒரு பிள்ளை, எமனுக்கு ஒரு பிள்ளை. அப்புறம் இந்திரனுக்கு ஒரு பிள்ளை, வாயுவுக்கு ஒரு பிள்ளை. அப்புறம் என்னமோ கந்தர்வனுக்கோ, வேறு யாருக்கோ 2 பிள்ளைகள் இப்படி

6 பிள்ளைகள் பெத்து இருக்கிறாள். இந்திர லோகத்திலோ அல்லது இங்கே வந்து பெத்தாளா? எமன், சூரியன், வாயு, இந்திரன் இவன் எல்லாம் எங்கே வந்து பெத்தான்க? அவர்களெல்லாம் எங்கே இருக்கிறார்கள்?

அவர்களெல்லாம் இங்கே வந்து எப்படி பெத்தார்கள்? சூரியனுக்கு ஒரு பிள்ளை, அவனுக்கு கர்ணன், உங்கள் அறிவுக்கு நான் அப்பீல் பண்றேன்! சொல்றேன், சூரியன் 9 கோடி மைலுக்கு மேலே இருக்கிறான். அங்கே இருக்கும்போதே இங்கு நெருப்பு பிடிக்கிறது. பூமியில் கால் வைத்தால் கால் கொப்பளிக்கிறது. மரத்தோடு மரம் உரசினால் நெருப்பு பிடிக்கிறது. கதையைக் கேட்கிறோம். வருடந்தோறும் 20 பேர் செத்தான். 15 பேர் செத்தான் - வெயில் தாங்காமே நம் நாட்டில், நம்ம பக்கத்து மாகாணத்திலே. 9 கோடி மைலில் இருந்துகொண்டு இந்த மாதிரி சொல்றான்? இந்தப் பய இங்கே வந்து இவகிட்ட ஒரு பிள்ளையையும் பெத்தான் என்கிறான். இங்கே வந்தா நம்ம நாடு, இந்தியாவே மிஞ்சி இருக்காது. எல்லாமே வெந்து இருக்கும். அதை நம்பினாத்தான் பாரதக் கதை.

வாயு எப்படி போகும்? காத்து ஒரு பிள்ளையைக் கொடுக்குமா? தைரியமா எழுதுறானே! வாயு புத்திரன் பீமன், இந்திரனுடைய மகன்அர்ச்சுனன், எமனோட மகன் தர்மன், சூரியனோட மகன் கர்ணன். அவன் எல்லாம் இல்லாவிட்டால், மதமே இல்லை! இந்தக் கதையெல்லாம் பேசித்தானா மனுசன் ஆகணும்.

## நாம் சிந்திக்கணும்!

தோழர்களே! சிந்திக்கணும் நீங்கள்; நாம் அறிவாளியாகணும்; அதுக்கும் எனக்கும் சண்டை ஒண்ணும் இல்லை! ரொம்ப நேரமாக பேசிவிட்டேன். இந்தக் கதை எல்லாம் நாம் நம்பினால் மடையன். உலகத்தில் வேறு எங்கும் இந்த மாதிரி கதைகள் இல்லை. அதற்கேற்றாற்போல் உலகத்தில் எங்கும் சூத்திரன் இல்லை; எங்கும் பார்ப்பான் இல்லை. எங்கும் கடவுள்கள் கிடையாது. ஆனதினாலே நாம்



அறிவைக் கொண்டு சிந்திக்கணும், வளரணும். நமக்கு சக்தி அதிகம் உண்டு. உலகத்தில் உள்ள மத்தவர்களைவிட நமக்கு சக்தி அதிகம் உண்டு.

## நாம் புத்திசாலி!

மலையாளியைவிட நாம் புத்திசாலி, தெலுங்கனைவிட நாம் புத்திசாலி, கன்னடனைவிட நாம் புத்திசாலி. இது மாத்திரமல்ல; வெள்ளைக்காரனைவிட நாம் புத்திசாலி. நமது புத்திக்கு அவ்வளவு சக்தியுண்டு, பயன்படுத்தவில்லை. ஏனென்றால், நாம் உஷ்ணப் பிரதேசத்தில் உள்ளவங்க. நம் புத்தி சிலாக்கியமான புத்தி. குளிர் தேசங்களில் உள்ளவங்களுக்குக் கொஞ்சம் மந்த புத்திதான் - இயற்கையானது. அந்த ஊர் பூவுக்கு வாசனை கிடையாது. இந்த ஊர் பூவுக்கு வாசனை ரொம்ப இருக்கும். குளிர்தேசத்தில் உள்ள பாம்புக்கு விஷம் கிடையாது. இங்கேதான் இருக்கும். ஆனால், நாம்தான் உலகில் மட்டம்.

## நம்ப வேண்டாம்!

கடைசியாக சொல்லுகிறேன், நான் சொல்லுகிறேன் என்று நம்ப வேண்டாம். உங்களுக்குப் பொருத்தமாய் இருக்கிறதா? இல்லையா? என்ன செய்யணும்? எப்படி வாழணும்? இதையெல்லாம் நீங்கள் நம்பினால் கழகத்தில் சேரணும். கோயிலுக்குப் போகக்கூடாது. நெற்றியில் சாம்பல் அடித்துக்கொள்ளக் கூடாது. மண்ணைப் பூசிக்கொள்ளக் கூடாது. உற்சவங்களையெல்லாம் கொண்டாடக் கூடாது. இதெல்லாம் மடையருக்கு ஏற்றது.

## சங்கராச்சாரியார்!

ஓர் இடத்தில் பச்சையாகவே சொல்லுகிறானே! சங்கராச்சாரியைக் கேட்டால், ஏண்டா சாமிக்கு உருவம் இல்லியே, கதையில்லே என்கிறே! இதெல்லாம் என்ன? நீ ரொம்ப வேதாந்தியாச்சே! இதென்னடா கதையின்னு கேட்டால், இதெல்லாம் அறிவாளிகளுக்காக அல்ல.

முட்டாள்களுக்காக; பக்தி வருவதற்காக அப்படீன்னு சமாதானம் சொல்றான். நீங்களும் கும்பிடறீங்களேன்னா, அவர்களை நம்பச் செய்யறதற்காக.

## சாயிபாபாவும், வீரமுத்துசாமியும்!

ஆகையினால் அருமைத் தோழர்களே! (கூட்டத்திலே ஒருவர் கேள்வி கேட்கிறார்) இந்த சாயிபாபா, வீரமுத்துசாமி என்று ஒருத்தன் இருந்தான் தெரியுமா? அவன் அண்ணன்தான். அவனே... கையைப் பிடிச்சாலும் மாட்டேன்க மாட்டானே, அந்த விபூதி வீரமுத்துக்கே அவ்வளவு மதிப்புன்னா, இவனை ஏன் பெரிசாக்கமாட்டாங்க? என்ன அதிசயம். இவனென்ன அதிசயத்தைப் பண்றது?

அதிசயம் பண்றதுக்கு ஒரு மனுஷன் என்ன வந்திருக்கு? அதிசயம் பண்றதா இருந்தா இந்த உலகமே அதிசயத்தில் ஆயிடுமே?

## கற்பனைப் புரட்டு

ஆனதனாலே அருமைத் தோழர்களே, எல்லாம் கற்பனைப்புரட்டு. நாம் மடையனாக இருக்கிறவரைக்கும் அநேக சங்கதிகள் நடக்கும். இப்பதான் 20, 30 வருடமா இல்லை! சகல நோவும் பாடத்திலே போவுதாம்! மடப்பய, திருட்டுப்பய, அவன் பாடம் பண்ணுவான் அவனுக்குப் பேர் வந்திடும், வேப்பிலை இல்லாட்டி துணி, எல்லா நோவுக்காரங்களும் அவகிட்டே போய்க் கத்திட்டு இருப்பாங்க. ஆகையினாலே மனுஷனுக்கு அறிவு இல்லாட்டா ஆயிரம் சாமியார் தோணலாம்! என்ன அதிசயம் வேண்டுமானாலும் வரும்! அருள் கூர்ந்து நான் மறுபடியும் கேட்கிறேன் நான் சொல்றேன்னு நம்பாமே, இதெல்லாம் சரியா, தப்பா? இப்படியேன் இருக்காது? இருக்க முடியுமா? அந்த ஊர்லே இல்லை? அவனுக்கிருந்தா நமக்கு ஏன் இல்லே? இப்படியெல்லாம் போட்டு விசாரிச்சாதான் உண்மை தெரியும்!

## நான் பக்குவமாகலையாம்!

என்னைக் கேக்கறானே? ஏண்டா, கடவுள் எனக்குத் தெரியலே ஏண்டா உனக்குத் தெரியுதுன்னா, நீ இன்னும் பக்குவமாகலேங்கறான்;



நான் பக்குவமாகலைன்னு சொல்ல முடியுமா? எனக்கு ஏண்டா இல்லேன்னா, பக்குவமா வருவாரு, உன்னையும் ஒரு நாளைக்குச் செய்வாருங்கறான்.

## ஏமாறாதீர்கள், சிந்தியுங்கள்!

ஆனதனாலே தோழர்களே! ஏமாந்துடாதீங்க. எவன் எதைச் சொன்னாலும், 5ம் 4ம் ஒன்பதுன்னா எண்ணிப் பாருங்க. நான் 9 மணிக்கு முடிக்கலாம்னு இருந்தேன். ஆகையினாலே நேரமாச்சி. நீங்க உட்கார்ந்திருந்து கேட்டதாலே நான் பேசிக்கிட்டே போயிட்டேன். மன்னிக்கணும். கடைசியிலேயேும் அதையே கூறி முடிக்கிறேன். நம்பாதீங்க! நான் சொன்னதைச் சிந்தியுங்க! சரின்னு பட்டதை ஏத்துக்குங்க. ஏத்துக்கிட்ட பிறகு அதன்படி நடவுங்க என்று கூறி, என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

❍ ❍ ❍

பகுத்தறிவு,
சமூகநீதி,
வாழ்வியல்
அறிய
படியுங்கள்,
படியுங்கள்...

www.viduthalai.in



ஓராண்டுக்கான சந்தா நன்கொடை ...

| விடுதலை | உண்மை | பெரியார் பிஞ்சு | The Modern Rationalist |
|---|---|---|---|
| ரூ.1800 | ரூ.350 | ரூ.240 | Rs.300 |

இணையதளம் மூலமாகவும் சந்தாதாரர் ஆகலாம் ...

http://viduthalai.in/subscription என்ற இணையதளத்தில் Payment Gateway மூலம் Credit Card / Debit Card / Net Banking -அய் பயன்படுத்தி எளிதில் சந்தா செலுத்தலாம்.

நேரடியாக வங்கிக் கணக்குகளிலும் சந்தா செலுத்தலாம் ...

| | | | | |
|---|---|---|---|---|
| A/C Name | VIDUTHALAI | UNMAI | PERIYAR PINJU | THE MODERN RATIONALIST |
| Bank | INDIAN OVERSEAS BANK, Vepery | INDIAN OVERSEAS BANK, Vepery | INDIAN OVERSEAS BANK, Vepery | INDIAN BANK, Ethiraj Salai |
| Current A/C No. | 232002000000002 | 232002000000003 | 232002000000004 | 422157838 |
| IFS Code | IOBA0002320 | IOBA0002320 | IOBA0002320 | IDIB000C032 |

முக்கிய குறிப்பு : வங்கியில் சந்தாத்தொகை செலுத்தியவுடன் சென்னை 'விடுதலை' அலுவலகத்திற்கு **97109 44815** என்ற கைப்பேசி எண்ணுக்கு தொடர்புகொண்டு சந்தா விவரத்தினை சொல்லவும்.

மேலாளர், 'விடுதலை' பெரியார் திடல், 84/1(50), ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-600 007. தொலைப்பேசி : 044-2661 8161, 62, 63
கைப்பேசி: 97109 44813, 97109 44842, 97109 44819 • மின்னஞ்சல் : circulation.viduthalai@gmail.com



நான் சொல்வதற்கு முன்பு உங்கள்
அனைவரையும் கேட்டுக்கொள்வது
என்னவென்றால், நான் சொல்வதை
நம்பாதீர்கள்; அதன்படி நடக்க வேண்டுமென்று
உடனே இறங்கிவிடாதீர்கள்; என்ன செய்ய
வேண்டுமென்றால், சொல்லுவதைச் சிந்திக்க
வேண்டும். சரியா, தப்பா என்று ஆராய
வேண்டும். உங்களுக்கு எது சரி என்று பட்டதோ
அதை ஒத்துக் கொள்ள வேண்டும்; மற்றும்
எந்தக் காரியம் செய்ய வேண்டும் என்று
தோன்றுகிறதோ அதைச் செய்ய வேண்டும்.
"நாங்கள் சொன்னோம் - நான் சொன்னேன்"
என்பதற்காக ஒன்றையும், எதையும்
ஏற்றுக்கொள்ளக் கூடாது.

9 997720 146952

நன்கொடை ரூ.20/-